விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 09 புதன்கிழமை (22.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 093

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# பொன்சேகாவை சிறையில் தள்ளியோர் அவரிடம் மன்னிப்புக் கேட்கத் தயாரா?

## பாராளுமன்றில் பிரதமர் ஆவேசம்



(கொழும்பு)

வெள்ளைக்கொடி விவகாரத்தை காரணம் காட்டி முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இழுத்துக் கொண்டு சென்று சிறையில் தள்ளியவர்கள் யார் என்பது நன்றாகவே தெரியும். அப்போது அவர்கள் முறைகேடாக நடந்து கொண்டார்கள். அதற்காக இப்போது அவரிடம் மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கிறீர்களா? இதனை பகிரங்கமாக கூறுங்கள் பார்க்கலாம் என மகிந்த தரப்பைப் பார்த்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் நேற்று ஆவேசமாக கேள்வி எழுப்பினார்.

24ஆம் பக்கம் பார்க்க...

## ஜெனிவாவில் இறுதி நேர பரபரப்பு

(ஜெனிவா)

ஜெனிவாவில் மனித உரிமைப் பேரவையில் 34ஆவது கூட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இதில் மனித உரிமைகள் ஆணையாளர் நாளை இலங்கை

23ஆம் பக்கம் பார்க்க...

## மீனவர்களையும் படகுகளையும் இலங்கையிடமிருந்து மீட்போம்

### சுஷ்மா உறுதி

(புதுடில்லி)

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை மீட்போம், அவர்களால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிப்போம் என இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண வலியுறுத்தி தமிழக மீனவப் பிரதிநிதிகள் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜை நேற்று டில்லியில் சந்தித்தனர்.

இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகுகளை விடுவிக்கவும், மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறும் மத்திய வெளியுறவுத்

24ஆம் பக்கம் பார்க்க...

புருசோத்தமன் எழுதும் தமிழரின் தலைவிதி எப்படியாகும்? கட்டுரை உள்ளே...

## கேப்பாப்பிலவு விவகாரம் 2 தினங்களில் உரிய தீர்வு

(கொழும்பு)

கேப்பாப்பிலவு காணி விடயத்தில் எதிர்வரும் இரண்டொரு தினங்களில் உரிய பதில் கிடைக்கும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு-கேப்பாப்பிலவில் உள்ள தங்களுக்கு சொந்தமான காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த மூன்று வாரங்களாக பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், நேற்று நாடாளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார். போரா

24ஆம் பக்கம் பார்க்க...

## கோத்தா தலைமையில் மரணப்படை சி.ஐ.டியின் தகவலால் பரபரப்பு!

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, ஊடகவியலாளர்களை இலக்கு வைக்கும் உயர்மட்ட இரகசிய மரணப்படை ஒன்றை இயக்கினார் என்று கல்கிசை நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று தகவல் வெளியிட்டுள்ளனர்.

சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையை, பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் இயங்கிய இரகசியக் குழுவே மேற்கொண்டதாகவும்,

கோத்தபாய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் இருந்த மரணப்படையே இந்தக் கொலையைச் செய்திருப்பதற்கான சான்றுகள் கிடைத்திருப்பதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் கூறியுள்ளனர்.

தேசிய புலனாய்வுப் பணிப்பா

24ஆம் பக்கம் பார்க்க...

தரம் - 5
புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

## 'நான் இயக்கவில்லை' மறுக்கிறார் கோத்தா



(கொழும்பு)

இரகசிய மரணப் படை ஒன்றை இயக்கி ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் மீது தாக்குதல் நடத்தினார் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார். லஷந்த விக்கிரமதுங்க

24ஆம் பக்கம் பார்க்க...

## தமிழக மீனவர்கள் பத்துப்பேர் கைது

(கச்சதீவு)

கச்சதீவு அருகே மீன்பிடியில் ஈடுபட்ட பத்து தமிழக மீனவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இராமேஸ்வரத்தில் இருந்து 300 விசைப்படகுகளில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்ற நிலையில், கச்சதீவு அருகே இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளதோடு, அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (இ-7)

## இரு வருட அவகாசத்திற்கு எதிர்ப்பு; சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்து

### வட-கிழக்கில் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையால் இலங்கைக்கு இரு வருட கால அவகாசம் வழங்கப்படுவதை கண்டித்தும் இலங்கை மீது சர்வதேச விசாரணைப்பொறிமுறையை மேற்கொள்ள வலியுறுத்தியும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தழுவிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்றை தினம் காலை 9.30 மணியளவில் பொதுமக்களால் முன்னெடுக்கப்படவுள்ளது.

தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையின் அமர்வு ஜெனிவாவில் நடைபெற்றுகொண்டுள்ள நிலையில் இப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட மத்திய பேருந்து நிலைய முன்றல்களிலும், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் காணாமல் போனவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இடத்திலும், முல்லைதீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவு

24ஆம் பக்கம் பார்க்க...

## வடக்கு மாகாண அரசில் 1, 451 வெற்றிடங்கள்!

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் கீழ் தற்போது ஆயிரத்து 451 வேலை வாய்ப்பு வெற்றிடங்கள் இருப்பதாகவும் அவை தொடர்பான விபரங்கள் வடமாகாண சபை அவைத்தலைவரால் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்க பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் கீழ் உள்ள வேலை வாய்ப்பு வெற்றிடங்களை கடந்த 15ஆம் திகதி வடமாகாண சபை அறிவிப்பதாக தெரி

24ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதி மைத்திரி இன்று ரஷ்யா விஜயம்

(கொழும்பு)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் விசேட உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று ரஷ்யாவிற்கு பயணமாகவுள்ளார்.

44 வருடங்களிற்கு பின்னர் ரஷ்யாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்துக்கான இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு கிடைத்துள்ள வகையில் இவ்விஜயம் மிகவும் முக்கியதத்துவம் பெறுகிறது.

கடந்த ஆண்டு இந்திய கோவா நகரில் நடைபெற்ற பிறிக்ஸ் - பிம்ஸ்ரெக் இணை மாநாட்டின் போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஏற்பட்ட தனிப்பட்ட நட்பே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்த விஷேட அழைப்புக்கு காரணமாகும்.

இலங்கைக்கு பல்வேறு அனுகூலங்கள் கிடைக்கக்கூடிய பொருளாதார, வர்த்தக, சுற்றுலா, விஞ்ஞான, தொழில்நுட்ப, கல்வி மற்றும் கலாசார துறைகள்சார் ஒப்பந்தங்கள் ஜனாதிபதியின் விஜயத்தின்போது கைச்சாத்திடப்படவுள்ளன.

இலங்கை மற்றும் ரஷ்ய நாடுகளுக்கிடையில் இராஜதந்திர தொடர்புகள் ஆரம்பமாகி 60 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு நடைபெறவுள்ள வைபவத்தில் ஜனாதிபதி மைத்திரி கலந்துகொள்ளவுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் வியாபார தொடர்புகளை மேம்படுத்தும் நோக்குடன் இரு நாடுகளையும் சேர்ந்த வர்த்தகர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வர்த்தக சந்திப்பிலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

மிகக் குறைந்த கடன்சுமை மற்றும் வலுவான ஏற்றுமதி வருமானத்தையும் கொண்ட ரஷ்யா, உலகில் பாரியளவான கனிய மற்றும் பெற்றோலிய படிமங்களையும், சிறந்த மொத்த தேசிய உற்பத்திப் பொருளாதாரத்தையும் ரஷ்யா கொண்டுள்ளதுடன், கலை மற்றும் விஞ்ஞானதுறையில் விசேட பாரம்பரியத்தையும், சிறந்த தொழில்நுட்ப உற்பத்திகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இலங்கைக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் இடையிலான தொடர்புகள் 1957 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியன. தற்போது இரு நாடுகளுக்குமிடையில் சிறப்பான பொருளாதார தொடர்புகள் காணப்படுகின்றன. அவ்வாறே இலங்கை தேயிலை ஏற்றுமதியில் சுமார் 17 வீதத்திற்கு ரஷ்யாவில் சந்தை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்ட நாளிலிருந்து எந்தவொரு வெளிநாட்டு பயணத்துக்கும் விசேட விமானத்தை பயன்படுத்தாத ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது வெளிநாட்டு உறவுகளின் சிறப்பை வெளிப்படுத்தும் இந்த விஜயத்திலும் அதே கொள்கையிலிருந்து விலகாமல், விமான நிலைய இராணுவ மரியாதையை கருத்திலெடுக்காமல் சாதாரண பயணிகள் விமானத்தில் பயணிக்க தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)


WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள

உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஓரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

(சி-7867)

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com


# அரசியல் கைதிகளுக்கு உடன் பிணை வழங்குங்கள் - சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு பிணை வழங்கி விடுதலை செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசியல் கைதிகளுக்கு பிணை வழங்கி விடுதலை செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் கோரிக்கையை சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதில் தொடர்ந்தும் அரசாங்கம் காலத்தை தாழ்த்தி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றம் சுமத்தினார். (11)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் ஐயாத்துரை முருகானந்தராசா

எமது கோட்டக்கல்வி அலுவலர் ஐ.குகானந்தராசா அவர்களின் அன்புச் சகோதரன் அமரர் ஐயாத்துரை முருகானந்தராசா காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- பளை கோட்ட அதிபர்கள்

(சி-7876)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான ஏலக் கேள்வி அறிவித்தலில் திருத்தம்

2017.03.21 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பர அட்டவணையில் 3ஆவதாக குறிப்பிடப்பட்ட நெல்லியடி கோழி இறைச்சிக்கடைக்கான குத்தகை ஏலக் கேள்வி அறிவித்தல் இரத்துச் செய்யப்படுகின்றது.

அ.வினோராஜ்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசபை, கரவெட்டி.
22.03.2017

(சி-7872)



# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை



**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவத்திற்கான வாணிப நிலையங்களை ஏலம் விடுதல்.**

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 09.04.2017 ஆம் திகதி நடை பெறவுள்ளது. உற்சவ காலங்களில் வியாபாரம் மேற்கொள்கின்றவர்களுக்கான கடை ஏலம் விடுதல் எதிர்வரும் 26.03.2017 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

வியாபாரம் மேற்கொள்ள விரும்புகின்றவர்கள் குறித்த ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முழுப் பணத்தையும் செலுத்துதல் வேண்டும்

செயலாளர்
நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபை,
புளியம்பொக்கணை.

(சி-7873)

# மரண அறிவித்தல்



## திருமதி ராதா திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற ஆசிரியை - வட. இந்து மகளிர் கல்லூரி)

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராதா திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற ஆசிரியை - வட.இந்து மகளிர் கல்லூரி) அவர்கள் நேற்று (21.03.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருநாவுக்கரசு (அன்னம்ஸ் மல்ரி சேவிஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், கணேசன் - சொர்ணாம்பிகை தம்பதியினரின் பாசமிகு புதல்வியும், வயிரமுத்து - அன்னபூரணம் தம்பதியினரின் மருமகளும், பிரணவன், துவாரகன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் C.P.G Consultants) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.03.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓடை ஒழுங்கை,
பருத்தித்துறை.

(சி-7875)

தகவல் : குடும்பத்தினர்
0772835397, 0766781886

# அரசுக்கு ஐ.நா.கால அவகாசம் வழங்கினால் அரசியல்கைதிகளின் விடுதலை கானல் நீராகும்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பியிடம் கைதிகள் கவலை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கும் பட்சத்தில் தமது விடுதலை கானல் நீராகும் என அரசியல் கைதிகள் கவலை வெளியிட்டுள்ளனர். அரசாங்கத்திற்கு ஏற்கனவே கால அவகாசம் வழங்கப்பட்ட போதிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அரசாங்கம் நீக்கவில்லையெனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய் யப்பட்டு கொழும்பு - மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்றுக்காலை சென்று பார்வையிட்டார்.

2015 ஆம் ஆண்டு ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுவதற்கு மேலும் 18 மாதகால அவகாசம் வழங்குவது தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதன் தமிழ் அரசியல் கைதி களுடன் கலந்துரை யாடி யுள்ளார்.

எனினும் இலங்கை அரசாங்கம் ஏற்கனவே சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவில்லையென அரசியல் கைதிகள் கவலை வெளியிட்டதாக நாடாளு மன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். (இ-7)

## எண்பது நாட்களில் 23 ஆயிரம் பேர் டெங்கால் பாதிப்பு

### 18 பேர் உயிரிழப்பு

நாடளாவிய ரீதியில் இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 23047 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த நோயினால் கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் வருடத்தின் மூன்று மாதகாலப்பகுதிக்குள் 18 பேர் மரணித்துள்ளனர். இம்மாதம் 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் 4 ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக அவ்வமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

வடக்கு மாகாண பட்டதாரிகள் நேற்று 23 ஆவது நாளாக யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அரச வேலைவாய்ப்புக் கோரி கடந்த இருபத்து மூன்று நாட்களாக இரவு பகலாக போராடி வருகின்ற பட்டதாரிகள், தமக்கான வேலை வாய்ப்பு கிடைக்கும் வரையிலும் தமது போராட்டம் முடிவின்றி தொடரும் என அறிவித்துள்ளனர்.

(படங்கள்:- உ.சாளின்)








## டெங்குக் காய்ச்சலால் இளைஞன் உயிரிழப்பு



இந்த சோகத்தில் இருந்து மீள்வதற்கு முன்னர் தோப்பூர் அல்லைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நூர் முஹம்மது நுபைர் டெங்கு நோயினால்நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை உட்பட நாட்டில் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான மரணங்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுததியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டெங்கு நோய்த் தாக்கத்தினால் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவரும் உயிரிழந்துள்ளமை திருகோணமலையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டெங்கு நோய் காரணமாக திருகோணமலை பள்ளத்தோட்டத்தைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

டெங்கு நோய் காரணமாக நாடளாவிய ரீதியில் இதுவரை 23ஆயிரத்து 47 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு கடந்த 3 மாதங்களில் மாத்திரம் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை இம்மாதம் 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் 4 ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்புடன் போர்க்குற்ற விசாரணை உறுதி!

### முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அச்சம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் இரட்டை வேடம் ஐ.நா. மனித உரிமைகள் பேர வையில் இலங்கையின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கி யுள்ளது. போர்க்குற்ற விசாரணைகள் சர்வதேச நீதிபதிகளின் பங்க ளிப்புடன் நடைபெறுவது உறுதியாகும் வகையிலேயே புதிய தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாக முன்னாள்வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொது மக்களை ஏமாற்றும் வகையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சர்கள் போலியான தரவுகளை வெளிப்படுத்தி வருகின்றமை மிகவும் மோசமானதொரு நிலையாகும். எனவே நாட்டின் எதிர்காலம் குறித்து பொறுப்புடன் சிந்திக்க வேண்டிய கட்டாயம் அனைவருக்கும் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

போர்க்குற்றச்சாட்டுக்களை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் விசாரணை செய்து சம்பந்தப்பட்ட படையினருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதாக இலங்கை ஜெனிவாவில் மீண்டும்உறுதிமொழி வழங்கியுள்ளது.

2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானத்தின் 6 ஆவது தீர்மானம் சர்வதேச நீதிபதிகள் மற்றும் குற்றவியல் விசாரணையாளர்களை உள்ளடக்கிய கலப்பு விசாரணைக்கான அங்கீகாரமாகும்.

சர்வதேச நீதிபதிகள் விவகாரத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அதனை நீக்குவதற்கு செயற்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு எதனையும் செய்யாது ஜெனிவாவில் அனைத்து விடயங்களுக்கும் தலையை ஆட்டி விட்டு இல்லை நாங்கள் ஏற்றுக் கொள்ள போவதில்லை என்று இலங்கையில் கோஷமிடுவதில் பலனில்லை. எனவே நாட்டு மக்கள் தற்போதைய நிலைமைகளைபுரிந்துகொள்ள வேண்டும்.

ஜெனிவாவில் அரசாங்கம் செயற்படுகின்ற விதம் இலங்கையின் எதிர்காலம் பாரிய சவாலாகி விடும் நிலையிலேயே காணப்படுகின்றது. இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள விவாதத்தில் சர்வதேச நீதிபதிகள் தொடர்பான நிலைப்பாட்டை அரசாங்கம் வெளிப்படையாக கூற வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தை தவறவிட்டால் அனைத்துலக குற்றவியல் நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்கள் நாட்டுக்கு வந்து இராணுவத்திற்கு எதிரான விசாரணைகளை முன்னெடுப்பார்கள்.

இதன் பின்னர் அடையாளம் வெளிப்படுத்தாத சாட்சியங்களின் அடிப்படையில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு இராணுவத்திற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கும் நிலை ஏற்படும்.

அரசாங்கம் சமாளிப்பதற்காக தலையை ஆட்டி விட்டு நாட்டிற்குள் வந்து போலியான கோஷங் கள் எழுப்புவதில்பலனில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.சி.சி சர்வதேச தரவரிசையில்

# பந்துவீச்சில் ஜடேஜா முதலாம் இடம் துடுப்பாட்டத்தில் புஜாரா முன்னேற்றம்



ராஞ்சி டெஸ்டில் இரட்டை சதம் அடித்த புஜாரா, டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் ஹோலி, ஜோ ரூட், கேன் வில்லியம்சன் ஆகியோரை பின்னுக்குத் தள்ளி இரண்டாம் இடத்தை பிடித்துள்ளார்.

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி ராஞ்சியில் நடைபெற்றது. நேற்று முன்தினத்துடன் முடிவடைந்த இந்த போட்டி சமநிலையில் முடிந்தது. முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் 178 ஓட்டங்கள் குவித்தார். பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய போது பதிலடியாக இந்தியாவின் புஜாரா 202 ஓட்டங்கள் குவித்தார்.

புஜாரா இரட்டை சதம் அடித்ததால் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் விராட் ஹோலி, ஜோ ரூட் மற்றும் கேன் வில்லியம்சன் ஆகியோரை பின்னுக்குத் தள்ளி 2-வது இடத்தைப் பிடித்துள்ளார். அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்மித் தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளார்.

ஸ்மித் 941 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். புஜாரா 861 புள்ளிகளுடன் 2-வது இடத்திலும், ஜோ ரூட் 848 புள்ளிகளுடன் 3-வது இடத்திலும், விராட் ஹோலி 826 புள்ளிகளுடன் 4-வது இடத்திலும், கேன் வில்லியம்சன் 823 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

பாகிஸ்தானின் அசார் அலி 779 புள்ளிகளுடன் 6-வது இடத்திலும், யூனிஸ்கான் 772 புள்ளிகளுடன் 7-வது இடத்திலும், டேவிட் வோர்னர் 768 புள்ளிகளுடன் 8-வது இடத்திலும், தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா மற்றும் குயிண்டென் டி கொக் முறையே 9-வது இடத்தையும், 10-வது இடத்தையும் பிடித்துள்ளனர்.



இதே வேளை பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் இந்தியா அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையே நடக்கும் டெஸ்ட் தொடரில் சிறப்பாக பந்து வீசி அசத்திய ஜடேஜா அதிக விக்கெட்களை கைப்பற்றினார். இரு அணிகள் விளையாடிய மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரு இன்னிங்ஸிலும் சேர்த்து மொத்தமாக 9 விக்கெட்களை ஜடேஜா வீழ்த்தினார்.

இதை தொடர்ந்து டெஸ்ட் பந்து வீச்சாளர்கள் பட்டியலில் 899 புள்ளிகளை பெற்று சர்வதேச டெஸ்ட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். தமிழகத்தை சேர்ந்த ரவிச்சந்திரன் அஸ்வின் 862 புள்ளிகளை பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளார்.

# அஸ்வின் - லயன் ஜொலிக்காததற்கு ஸ்டார்க் இல்லாததுதான் காரணம்

**கங்குலியின் புதிய கண்டுபிடிப்பு**



ராஞ்சி டெஸ்டின் ஓஃப் ஸ்பின்னர்களான அஸ்வின் மற்றும் நேதன் லயன் ஜொலிக்காததற்கு மிட்செல் ஸ்டார்க் களத்தில் இல்லாததுதான் காரணம் என கங்குலி கூறியுள்ளார்.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் ராஞ்சியில் நடைபெற்றது. இந்த போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிந்தது. சுழற்பந்து வீச்சில் இந்திய வீரர் ஜடேஜா மட்டும் முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டும், 2-வது இன்னிங்சில் 4 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

லெக் ஸ்டம்பிற்கு சற்று வெளியே ஆடுகளம் கரடுமுரடாக மாறியிருந்தது. அந்த இடத்தை பயன்படுத்தி இடது கை சுழற்பந்து வீச்சாளரான ஜடேஜா விக்கெட்டுக்களை அள்ளினார்.

ஆனால் ஓஃப் ஸ்டம்பிற்கு வலது புறம் ஐந்து நாட்கள் ஆகியும் ஆடுகளம் கரடுமுரடாக மாறவில்லை. இதனால் முதல் இன்னிங்சில் 34 ஓவர்கள் வீசிய அஸ்வின் 114 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட் மட்டுமே வீழ்த்தினார். இதில் இரண்டு ஓட்டமற்ற ஓவர்கள் மட்டுமே அடங்கும். 2-வது இன்னிங்சில் 30 ஓவர்கள் வீசி 71 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட் மட்டுமே கைப்பற்றினார். 10 ஓட்டமற்ற ஓவர்கள் வீசினார்.

அவுஸ்திரேலியாவின் வலது கை சுழற்பந்து வீச்சாளரான நேதன் லயன் முதல் இன்னிங்சில் 46 ஓவர்கள் வீசி 163ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட் வீழ்த்தினார். இதில் 2 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கும். 2-வது இன்னிங்ஸில் பந்து வீச வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

தலைசிறந்த பந்து வீச்சாளர்களான இவர்கள் இரண்டு பேரும் 110 ஓவர்கள் வீசி 3 விக்கெட்டுக்கள் மட்டுமே வீழ்த்தியுள்ளனர். இதற்கு மிட்செல் ஸ்டார்க்கின் மிஸ்சிங் தான் காரணம் என்று கங்குலி கூறியுள்ளார்.

இடது கை வேகப்பந்து வீச்சாளரான ஸ்டார்க் ஓவர் தா ஸ்டிக் எடுத்து பந்து வீசுவார். இதனால் அவர் கால் பதிக்கும் இடம் கரடு முரடாக மாறும். அப்படி மாறினால் அந்த இடத்தில் ஓஃப் ஸ்பின்னர் பந்து வீசும்போது அதிக அளவில் திரும்பும். அந்த வாய்ப்பில்லை.

இதுகுறித்து கங்குலி கூறுகையில், "ராஞ்சி டெஸ்டில் ஓஃப் ஸ்பின்னர்கள் விக்கெட்டுக்கள் வீழ்த்தவில்லை. இதற்கு காரணம் மிட்செல் ஸ்டார்க் இல்லாததுதான். அவர் இல்லாததால் ஓஃப் ஸ்டம்பிற்கு சற்று வெளியே கரடுமுரடான பகுதி உருவாகாமல் போய்விட்டது" என்றார். (க)

# சர்வதேச டெனிஸ் தரவரிசை ரோஜர் பெடரர் முன்னிலை



அவுஸ்திரேலிய ஓபன் மற்றும் இண்டியன் வெல்ஸ் கோப்பையை வென்றதன் மூலம் 4 இடங்கள் முன்னேறி 6-வது இடத்தை பிடித்துள்ளார் ரோஜர் பெடரர்.

சுவிட்சர்லாந்தின் முன்னணி டென்னிஸ் வீரராக திகழ்ந்து வருபவர் ரோஜர் பெடரர். ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றவர் என்ற பெருமையை பெற்றிருக்கும் பெடரருக்கு கடந்த வருடம் சிறந்ததாக அமையவில்லை. மேலும் காயம் காரணமாக சில மாதங்கள் களம் இறங்காமல் இருந்தார். இதனால் டென்னிஸ் தரவரிசையில் பின்னால் தள்ளப்பட்டார்.

இந்த வருடத்தின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் சிறப்பாக விளையாடினார். இறுதிப் போட்டியில் ரபெல் நடாலை கடும்போராட்டத் திறகுப்பின் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இண்டியன் வெல்ஸ் தொடரில் சகநாட்டு வீரரான வாவ்ரிங்காவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். இதன் மூலம் டென்னிஸ் தரவரிசையில் நான்கு இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ளார்.

10-வது இடத்தில் இருந்த பெடரர், தற்போது 6-வது இடத்திற்கு முன்னேற்றம் அடைந்துள்ளார். இங்கிலாந்தின் அண்டி முர்ரே, செர்பியாவின் ஜோகோவிச், வாவ்ரிங்கா ஆகியோர் முதல் மூன்று இடங்களில் அப்படியே நீடிக்கின்றனர்.

ஜப்பானின் நிஷிகோரி ஒரு இடம் முன்னேறி 4-வது இடத்தைப் பிடித்துள்ளார். கனடாவின் மிலோஸ் ரயோனிக் 1 இடம் பின்தங்கி 5-வது இடத்தைப் பிடித்துள்ளார். நடால் 7-வது இடத்தையும், டொமினிக் தியெம் 8-வது இடத்தையும், மரின் சிலிச் 9- வது இடத்தையும், டிசோங்கா 10-வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

பெண்கள்: ஒற்றையர் பிரிவில் ஏஞ்சலிக் கெர்பர் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். (க)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# தற்போது உத்வேகம் எங்களிடம்தான் உள்ளது

## அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்மித்



ராஞ்சியில் நடைபெற்ற இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமனிலையில் முடிந்தது.

அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் கருத்து தெரிவிக்கையில், தற்போது உத்வேகம் எங்கள் அணியிடம் தான் உள்ளது.

இந்த போட்டியில் எங்கள் அணியின் அனைத்து விக்கெட்டுகளையும் வீழ்த்தி வெற்றி பெற இயலாமல் போனது இந்திய அணிக்கு பாதிப்பை ஏற்படுத்தி இருக்கும். ராஞ்சி டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்து இருப்பதன் மூலம் கடைசி டெஸ்ட் போட்டி மிகவும் எதிர்பார்ப்பு நிறைந்ததாக இருக்கும். நடைபெற்ற ஆட்டத்தில் விக்கெட்டை இழக்காமல் விளையாட வேண்டும் என்று முடிவு செய்து களம்கண்டோம்.

ஹேன்ட்ஸ்கோம்ப், ஷோன் மார்ஷ் ஆகியோர் எங்களது திட்டத்தை களத்தில் அருமையாக செயற்படுத்தினார்கள். முதல் இன்னிங்ஸில் இன்னும் 100 ஓட்டங்கள் கூடுதலாக எடுத்து இருந்தால் நாங்கள் வலுவான நிலையில் இருந்து இருப்போம்' என்று தெரிவித்தார்.

# சாவு அறிவித்தல்



## இராசலிங்கம் தங்கேஸ்வரி

வட்டக்கச்சியை பிறப்பிடமாகவும் இல. 586, 6-ம் யூனிற் இராமநாதபுரம் எனும் முகவரியில் வசித்துவந்தவரும் புதுக்காடு இராமநாதபுரம் எனும் முகவரியில் வசித்துவந்தவருமாகிய இராசலிங்கம் தங்கேஸ்வரி (ராணி அக்கா, சர்வோதய ராணி) அவர்கள் 21.03.2017 நேற்று காலை அகாலச்சாவடைந்துள்ளார். அன்னார் இராசலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை புவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகளும் அஜந்தா (யசோ), ஜனகரன் (ஜனா) ஆகியோரின் அன்பு தாயாரும் ஜனா, நேசன் ஆகியோரின் சிறிய தாயாரும் உதயநாதன் அவர்களின் அன்பு மாமியாரும் கலையரசன் (இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவன்) டதுர்சன், சுவிச்சன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் அன்னாரின் இல்லத்தில் இன்று காலை 10.00 மணியளவில் இல. 586, 6-ம் யூனிற் எனும் முகவரியில் நடைபெற்று தகனக்கிரிகைகளுக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-7877)

# காங்கேசன்துறையில் களப்பயிற்சியை ஆரம்பிக்கிறது இலங்கை இராணுவம்

மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றச் செல்லவுள்ள இலங்கை இராணுவத்தின் அணியொன்று, பாரிய களப் பயிற்சி ஒத்திகை ஒன்றை காங்கேசன்துறையில் ஆரம்பிக்கவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி காங்கேசன் துறையில் ஆரம்பிக்கும் இந்தக் களப் பயிற்சி ஒத்திகை, 9 நாட்கள் 1166 கி.மீ பயணம் செய்து, அம் பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள சூரியவெவவில் நிறை வடையவுள்ளது.

மாலியில் ஐ.நாவின் சண்டை வாகனத் தொடரணியில் இடம்பெறவுள்ள இலங்கை இராணுவத்தின் 15 அதிகாரிகள் மற்றும் 185 படையினர் இந்தப் பாரிய ஒத்திகைப் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர்.

மாலியில் உள்ள கள நிலைச்சவால்களை எதிர் கொள்வது குறித்த தயார்படுத்தல்களை மேற் கொள்ளவே இந்த ஒத்திகை மேற்கொள்ளப்படு கிறது. இந்தப் பயிற்சியில் கவசப்படை, இயந்திர காலாட்படை மற்றும் ஏனைய உதவிப்படைப் பிரிவுகளுடன் 68 வாகனங்களும் ஈடுபடவுள்ளன.

போர் மற்றும் விநியோக நடைமுறைகள், கட்டளை மற்றும் தலைமைத்துவம், அவசரகால திட்டங்கள், போர் தொடரணி நடவடிக்கைகள், அவசர நிலையின் போது முடிவெடுத்தல், தொடரணி பயிற்சி உத்திகள், போராட் டங்களைக் கட்டுப்படுத்தல், வெடி பொருட்களை செயலிழக்கச் செய்தல், நிர்வாக மற்றும் விநியோகம், தொலைத் தொடர்பு பராமரிப்பு மற்றும் ஏனைய நடைமுறைகள், தொழில்நுட்பங்கள் குறித்து இந்தப் பயிற்சியில் கவனம் செலுத்தப்படும்.

மாலியில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றுவதற்கு படையினரைத் தயார்படுத் தும் வகையிலேயே இந்தப் பாரிய பயிற்சி மேற்கொள்ளப் படவுள்ளது. (இ-7)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி இராமசேது (மலர்)



பிறப்பு: 1942.08.16 இறப்பு: 2017.03.18

அல்வாயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி இராமசேது (மலர்) 18.03.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பருவதம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாராயணப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் இராமசேதுவின் (சிற்பக்கலைஞர்) அன்பு மனைவியும் இராசமணியின் மைத்துனியும் அழகம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அன்னம்மா, நவரத்தினம், ஆனந்தம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற அசோக்குமார் மற்றும் ரதிவதனா (பிரான்ஸ்), உதயகுமார் (லண்டன்), வசந்தகுமார், ஜெயரதி (கனடா), ரஜினா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலைச்செல்வி (சுவிஸ்), சடாட்சரலிங்கம் (பிரான்ஸ்), புனிதவதி (லண்டன்), துர்க்கா, சுரேஸ்குமார் (கனடா), ரமேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிறோஜன், பிரசாந், சுமன், சுமித்திரா, வித்யா, அஸ்வினி, அனுஷ்கா, அஸ்விந், டிலோஜனா, தேனுஜன், ஜினோசன், தனுஜா, மதுசா, அபிரா, அஸ்வின், ஆகாஷ், கிருஜா, ரக்ஷன், அபிஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'உதயமஹால்'
செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

(8365)

தகவல்:
குடும்பத்தினர்
077 220 9615


சீ பேங்க் சேவிங்க்ஸ் ப்ளஸ் நிதியம்

உங்கள் சேமிப்புக்கு கவர்ச்சிகரமான வருவாய்

10.7% (P:A) சீ பேங்க் சேவிங்க்ஸ் ப்ளஸ்

வருடாந்த மொத்த விளைவு (28 பெப்பிரவரி 2017 இல்)

- பாரம்பரிய சேமிப்புக் கணக்கினை விட மேலதிக விளைவுகள்
- வரி இலவச விளைவுகள்
- பணத்தினை இலகுவாக மீளப்பெறும் வசதி

மேலதிக தகவலுக்கு

குமுது 071 066 2007 சுபாஷினி 071 066 2077

பொறுப்பாளர் NSB
பங்குதாரர் BANK OF CEYLON Bankers to the Nation, Sri Lanka Insurance, Carson Cumberbatch PLC, uti

Ceybank ASSET MANAGEMENT LTD
54/C1, வோர்ட் பிலேஸ்,
கொழும்பு 07.
வெப்: www.ceybank.com
மெயில்: info@ceybank.com

(076)

*தற்போதய வருடாந்த வருவாய் விகிதம் சந்தை நிலைமைகளுக்கேற்ப எதிர்காலத்தில் மாற்றமடையலாம். கடந்த கால வருவாய் வீதங்கள், எதிர்கால வருமானங்களுக்கான குறிகாட்டி அல்ல.


## இராசி பலன்

22.03.2017
(பங்குனி 09, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
நவமி முற்பகல் 10.23 மணிவரை
பூராடம் பிற்பகல் 12.15 மணிவரை
சுபநேரம் 4.47-6.17மணிவரை
இராகுகாலம் 12.17-1.47 மணிவரை
சர்வதேச குடிநீர் தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத, சுக் | செவ் | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம், திருவாதிரை<br>இரவு 6.32 மணிக்கு<br>மகர-சந் | | |
| | | | ராகு |
| சந் | சனி | | குரு |

**மீனம்**

முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரும் நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மேடம்**

உடல்நலன் சீராகி உற்சாகம் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்**

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உறவினர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்**

கல்யாணக் கனவுகள் நனவாகும் நாள், பழைய சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை வைப்பீர்கள், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்**

பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், அந்நியதேசத் தொடர்புகள் எண்ணியபடியே கைகூடும்.

**கடகம்**

உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்**

சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.

**சிம்மம்**

பிள்ளைகள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சிறப்பான நாள்.

**தனுசு**

சவால்களை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்**

குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்**

புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி**

கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.







வடமாகாணசபை உறுப்பினர்களான சி.அகிலதாஸ், கே.தர்மலிங்கம், வி.சிவயோகன், எஸ்.சுகிர்தன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து 55 இலட்சம் ரூபா செலவில் கொற்றாவத்தை அ.த.க. பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் நேற்று முன்தினம் 20ஆம் திகதி திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.(படங்கள்:மகாலிங்கம்

## புத்தகங்கள் வழங்கல்



0

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய இந்து மன்றத்தால் சர்வதேச மகளிர் தினத்தில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் நூல் நிலையத்துக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு மகளிர் தினத்தன்று முற்பகல் 10:00 மணியளவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.சிவசங்கரநாதனால் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ந.முகுந்தனிடம் புத்தகங்கள் வழங்கப்பட்டது. (இ-89)

# ராணுவ வசமுள்ள காணி விபரம் எமது கட்டுக்கோப்பில் இல்லை

## கரவெட்டி பிரதேச செயலாளர் அறிவிப்பு

கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குள் இராணுவம் வசமள்ள காணி விபரம் தமது கட்டுக்கோப்பில் இல்லை என பிரதேச செயலாளர் ச.சிவசிறி தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேச செயலக பிரிவுக்குள் இராணுவத்தினர் வசமுள்ள காணி விபரங்களை தகவல் அறியும் சட்டம் மூலம் வவுனியாவை தளமாகக் கொண்டு இயங்கும் அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் வலையமைப்பு கோரியிருந்தது. அதற்கு அவர் அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

எமது பிரிவில் இராணுவத்தினர் வசமள்ள தனியார், அரச காணிகளின் விபரங்கள் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான கோரிக்கை தொடர்பான விடயங்கள் எமது கட்டுக்கோப்பில் இல்லாத காரணத்தினால் அதனை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-250)




## அதிபர்களுக்கான கூட்டம்

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை 23ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கோப்பாய் கல்வி கோட்டத்தில் இடம்பெறும் என கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சிவனேசன் அறிவித்துள்ளார். (இ-3,136)

# எமது கடல் வளங்களை சூறையாடுவதை இந்திய மீனவர்கள் நிறுத்த வேண்டும்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் தெரிவிப்பு

இனந்தெரியாத நபர்கள் செய்த கொலைக்கு இலங்கை கடற்படையை காரணம் காட்டிவிட்டு எமது கடல் வளங்களை சூறையாடுவதை இந்திய மீனவர்கள் இத்துடன் நிறுத்த வேண்டும் என தெரிவித்த வடமாகாண கடற்றொழிலாளர் இணையம், இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர வேண்டும் எனவும் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ் பாடி விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்குறித்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் ஏ.எம்.ஆலம் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்திய மீனவர் ஒருவர் சுடப்பட்ட விடயம் தொடர்பாக தமிழ் நாட்டில் பல எதிர்ப்புக்கள் ஏற்பட்டு தற்போது தணிந்துள்ளது. நாமும் அதற்கு அனுதாபங்களைத் தெரிவித்து கொள்கிறோம். இந்த நிலையில் குறித்த சூட்டுச் சம்பவம் தொடர்பில் எந்தப் பகுதியினரும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

ஆனால் இந்தியாவில் உள்ள மீனவர்களும் அரசியல் வாதிகளும் இலங்கை கடற்படை தான் சுட்டார்கள் என தெளிவாக குறிப்பிட்டு வருகிறர்கள்.

ஆனால் இலங்கை கடற்படை சுடவில்லை என குறித்த சம்பவம் நடந்த மறுதினமே அரசு அறிவித்திருந்தது. அவை தொடர்பாக விசாரணை செய்யப்படும் என அந்த நாட்டின் உயர் தலைவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள் என தெரியவில்லை.

அத்துமீறி எமது எல்லைக்குள் நுழைபவர்களை கைது செய்யுங்கள். அவர்களின் படகுகளை கைப்பறுங்கள் என தான் நாம் தெரிவித்து வருகிறோம். சுட வேண்டிய தேவை இல்லை எனவும் தெரிவித்திருந்தோம்.

அனால் இந்திய மீனவர்களின் அநீதிகள் கொஞ்சம் நஞ்சமில்லை. சூட்டுச்சம்பவத்துக்கு பின்னரும் அவர்களின் அடாவடி அதிகரித்துள்ளது. அவர்களின் துன்புறுத்தல் அதிகரித்து செல்கிறது. சட்டவிரோதம் என தெரிந்திருந்தும் எமது பகுதிக்குள் வந்து எமது வளங்களை அழிக்கிறார்கள்.

யாரோ செய்த விடயத்துக்கு இலங்கை கடற்படையை காரணம் சொல்லி விட்டு அதை பயன்படுத்தி எமது கடல் வளங்களை சூறையாடுவதை இந்திய மீனவர் தவிர்க்க வேண்டும்.

அவர்களின் அத்துமீறல் தொடர்பாக இலங்கை அரசு தனது செயற்பாட்டை தொடர்ந்து செய்ய வேண்டும். இந்திய மீனவரும் இந்திய அரசும் இந்த விடயம் தொடர்பில் சட்டத்துக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என தெரிவித்தார்.

மேலும் இரண்டாவது விடயமாக இழுவை மடித் தொழில் தடை செய்வது தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சட்ட மூலம் நிறைவேற்றப்பட வேண்டும்.

இதற்கு வடமாகாண சபையில் உள்ள உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அவர்கள் தனது கிராமத்தின் வாக்கு வங்கியை தக்க வைத்துக் கொள்ள சட்டரீதியற்ற தொழிலை செய்வதற்கு ஆதரவாக உள்ளார்கள். இதை வடமாகாண சபை நிறுத்திக்கொள்ள வேண்டும். மாற்று தொழில் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்த விடயமாக கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவை அந்த பதவியில் இருந்து மாற்றம் செய்யவுள்ளதாக ஜனாதிபதி அண்மையில் அறிக்கை விடுத்துள்ளார். குறித்த அமைச்சர் முன்னைய தலைவர்களை விட வடமாகாணத்தில் உள்ள மீனவரின் நிலையை உணர்ந்தவராக உள்ளார்.

துன்பப்படும் மீனவர்களின் நிலையை புரிந்து செயற்படுகிறார். குறித்த ஜனாதிபதியின் அறிவிப்பை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். எதற்காக இந்த அறிக்கை வெளியிடப்பட்டது என்ற கேள்வி எமக்கு எழுந்துள்ளது.

இந்திய தரப்பின் அழுத்தம் காரணமாகவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அவரில் என்ன குறை உள்ளது என ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும். அவரின் அமைச்சு பதவியை மாற்றுவதற்கு வடபகுதி மீனவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் பி.சுப்பிரமணியம், நிர்வாக உறுப்பினர் பிரான்சிஸ் யோசேப், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு இணைப்பாளர் அன்ரனி யேசுதாசன்.தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இன்பம் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

## 16 வயதுப் பெண் படுகொலை! சந்தேக நபரின் பிணை இரத்து

நெடுந்தீவு பகுதியில் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த எதிரி ஒருவர் நீதிமன்ற கட்டளையை மீறியதன் அடிப்படையில் அவரது பிணைக்கட்டளை இரத்து செய்யப்பட்டு தொடர் விசாரணை நடத்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவு பகுதியில் வசித்த நபரொருவர் கடந்த 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி அப்பகுதியில் வசித்து வந்த 16 வயது பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி கொலை செய்த குற்றத்துக்காக கைது செய்ப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

குறித்த நபர் நீதிமன்ற கட்டளையின் படி மாதத்தில் இரு தடவைகள் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் எதிரி அந்த கட்டளையை மீறியுள்ளார் என யாழ்.பொலிஸாரினால் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

நீதிமன்ற கட்டளையை மீறியதன் அடிப்படையில் குறித்த நபரை மன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிபதி பொலிஸாருக்கு கடந்த வாரம் கட்டளை பிறப்பித்திருந்தார். அந்த வகையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்றில் மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது எதிரி மன்றில் ஆஜராகியிருந்தார். குற்றப் பகிர்வுப்பத்திரம் எதி ரிக்கு வாசித்துக் காட்டப்பட்ட போது தான் சுற்றவாளி என தெரிவித்து யூரல் சபை இல்லாத விசாரணையை தெரிவு செய்வதாக மன்றில் தெரிவித்தார்.

அத்துடன் எதிரிக்கு பிணையாளிகளாக கையொப்பமிட்ட மூன்று பேர் தம்மை பிணை முறியில் இருந்து விடுவிக்குமாறு நேற்று முன்தினம் மன்றில் கோரியிருந்தனர். அதனடிப்படையில் 3 பிணையாளிகள் மன்றினால் பிணை முறியில் இருந்து நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

நீதிமன்ற கட்டளையை மீறியதன் அடிப்படையில் குறித்த நபரின் பிணைக் கட்டளை இரத்து செய்யப்பட்டு எதிரியை குறித்த வழக்கு முடியும் வரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3,5,6,7 ஆம் திகதிகளில் வழக்கின் தொடர் விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டதுடன் சாட்சிகளுக்கும் மன்றினால் அழைப்பாணை விடுக்கப்பட்டது. அந்த வகையில 1 தொடக்கம் 5 வரையான சாட்சிகளை விசாரிக்க சாட் சிகளை எதிர் வரும் ஏப்ரல் மாதம் மன்றில் ஆஜராகு மாறு தெரிவித்ததுடன் ஏனைய சாட்சிகளை 5 ஆம் திகதி ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது. (இ-9)

08

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

ரெலோவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் பதவியைக் கொடுத்ததும் அவர் அதோடு கூட்டமைப்பின் தலைமை எது செய்தாலும் ஆமாம் என்று சொல்வதைத் தவிர வேறு எதுவும் அறியாதவரானார்.

செல்வம் அடைக்கலநாதனை ஓரங்கட்டினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி வெளியேற வேண்டிவரும் என்பதைக் கூட்டமைப்பின் தலைமை அறிந்திருந்தது.

அதாவது செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் இருவரும் கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக் கட்சியை வெளியேற்றத் தயார் என்று கூறுவார்களாயின் மறுகணமே கூட்டமைப்பு என்பதிலிருந்து தமிழரசுக் கட்சி விலக்கப்படும்.

இந்த உண்மையை அறிந்திருந்த கூட்டமைப்பின் தலைமை செல்வம் அடைக்கலநாதனுக்கு பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை வழங்கி அவரை ஆசுவாசப்படுத்திற்று.

தனது பதவியைக் காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்த செல்வம்.அடைக்கலநாதன் தமிழ் மக்கள் பேரவையையும் கடுமையாக விமர்சித்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்மக்கள் பேரவை ஆரம்பித்த போது அதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் அங்கம் பெற்றிருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் பேரவையின் உறுப்புரிமையைப் பெற்றிருந்தார். ரெலோவின் அங்கத்துவத்தை பேரவையில் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சிகள் நடைபெற்ற போது செல்வம் அடைக்கலநாதன் தன்னைச் சந்திப்பதற்குக்கூட சந்தர்ப்பம் வழங்காமல் நழுவிக் கொண்டார்.

யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் புதிய ஆஜராக நியமனம் பெற்ற மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் பதவியேற்பு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது அந்நிகழ்விற்கு வருகை தந்த செல்வம் அடைக்கலநாதன் தமிழ் மக்கள் பேரவையின் பிரதிநிதிகள் தன்னைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கி அறிவித்தார். எனினும் அந்தச் சந்திப்பைக்கூட சாத்தியமற்ற தாக்கினார்.

அவர் கூறிய இடத்தில் பேரவையின் பிரதிநிதிகள் காத்திருந்து விட்டு வெறுமையாகத் திரும்பினர். இத்தகையவர்கள்தான் இப்போது தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுகின்றனர் என்றால் தமிழரின் தலைவிதி எப்படியாகும் என்பதைத் தெரிந்து கொள்வதில் அதிக கடினம் இருக்கமுடியாது.

இது ஒருபுறம் இருக்க, ரெலோவின் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தா அவர்கள் மற்றும் ரெலோவைச் சேர்ந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் தமிழ் மக்களின் உரிமை என்ற விடயத்தில் மிகவும் உறுதியாக இருக்கையில் செல்வம் அடைக்கலநாதன் மட்டும் ஒரு ஒரு புறநடையாகச் செயற்படுவது ரெலோவிற்குள்ளேயே விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளதென்பது மறுக்கமுடியாத உண்மை.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமது கைக்குள் வைத்திருப்பது, கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவக் கட்சிகளை ஓரங்கட்டுவது என்ற செயற்றிட்டம் நிணைத்தளவில் வெற்றியைக் கொடுத்து வந்துள்ளது.

செல்வம் அடைக்கலநாதனை ஒருவாறு தம்பக்கம் இழுத்த கூட்டமைப்பிற்கு புளொட் தலைவர் சித்தார்த்தன் சற்று இடைஞ்சலாகவே இருக்கிறார் என்பதும் உண்மை.

கடந்த பொதுத்தேர்தலில் சித்தார்த்தனைத் தோற்கடிக்கச் செய்வதில் பகிரதப்பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன. சித்தார்த்தன் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டால் அவர் வடக்கு மாகாண சபை உறுப்பினர் என்ற பதவியோடு இருந்துவிடுவார் என்பது கூட்டமைப்புத் தலைமையின் நினைப்பு.

உண்மையில் சித்தார்த்தனுக்கு அவரின் தொகுதியில் நிறைந்த செல்வாக்கு இருந்தது. வடக்கு மாகாண சபைத் தேர்தலில் சித்தார்த்தன் வெற்றிபெற்ற போது அவருக்கு அமைச்சுப் பதவி ஒன்று வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இருந்தும் சித்தார்த்தன் அவர்களுக்கு அமைச்சுப் பதவியை வழங்க சம்பந்தர் தயாரில்லை.

சரி வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் பதவியை சித்தார்த்தனுக்கு வழங்கலாம் என்ற ஒரு முடிவுக்கு கூட்டமைப்பு வந்த போது அதை ஏற்க சித்தார்த்தன் மறுப்புத் தெரிவித்து விட்டார்.

இந்நிலையிலேயே சீ.வீ.கே. சிவஞானம் அவர்கள் அவைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

எனினும் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் சித்தார்த்தன் தகுதியான வெற்றியைப் பெற்றிருந்தாராயினும் அவரை வாக்குகளின் அடிப்படையில் பின்னகர்த்தும் தந்திரோபாயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இருந்தும் சித்தார்த்தன் அவர்கள் உண்மை நிலையை வெளிப்படுத்தவேண்டி வரும் என்று எச்சரித்தபோது தேர்தல் அதிகாரிகள் சிலர் இனி எதுவும் செய்ய முடியாதென்ற முடிவுக்கு வந்தனர்.

பாராளுமன்ற தேர்தலில் சித்தார்த்தனின் வெற்றி கூட்டமைப்பின் தலைமைக்கு இக்கட்டான ஒரு சூழ்நிலையைக் கொடுத்ததென்பது மறுதலிக்க முடியாத உண்மை.

அதேவேளை இணைந்து- சேர்ந்து போகவேண்டும், தான் குழப்பம் விளைவித்ததாக இருக்கக்கூடாது என்பதில் சித்தார்த்தன் மிகவும் உறுதியாக இருக்கின்ற அதேவேளை, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் வயதுக்கும் அரசியல் அனுபவத்துக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பதிலும் சித்தார்த்தன் தளர்ந்தாரில்லை.



உண்மையை- நீதியை- நேர்மையை எடுத்துரைப்பதில் எச்சந்தர்ப்பத்திலும் தளராத சித்தார்த்தன் தனது மனச்சாட்சிக்கு சரி என்றால் அதை ஏற்றாக வேண்டும் என்ற பெருந்தன்மையும் கொண்டவர் என்பதை இங்கு கூறித்தான் ஆகவேண்டும்.

இதனால்தான் பாராளுமன்ற உறுப்பினர் என்பதற்கு அப்பால் தமிழ்மக்கள் பேரவையில் அங்கம் பெறுவது நியாயமானது என அவர் அங்கீகரித்துக் கொண்டார்.

(வளரும்)

-புருசோத்தமன்-

# 153 ஆவது பொலிஸ் வீரர் தினம் வவுனியாவில் நினைவு கூரப்பட்டது





நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படும் 153 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் நேற்று வவுனியா பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள பொலிஸ் வீரர்கள் நினைவுத் தூபிக்கு முன்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வு வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றது.

யுத்த காலத்தின்போது வடக்கு கிழக்கில் உயிரிழந்த 2 ஆயிரத்து 540 பொலிஸார் உட்பட இன்று வரையில் கடமையில் இருக்கும்போது உயிரிழந்த 3111 பொலிஸ் வீரர்கள் நினைவாக வவுனியாவில் அமைந்துள்ள நினைவுத்தூபிக்கு முன்பாக உயிர் நீத்த பொலிஸாருக்கு அஞ்சலி செலுத்தி அவர்களது சேவைகளும் நினைவு கூரப்பட்டன.

பொலிஸ் நினைவுத் தூபிக்கு விசேட பொலிஸ் மரியாதை அணிவகுப்பு நடத்தப்பட்டதுடன் அதன் பின்னர் உயிர் நீத்த பொலிஸாரின் உறவுகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மலரஞ்சலி செலுத்தி உயிர்நீத்த பொலிஸ் உத்தியோகத்தர்களை நினைவு கூர்ந்தனர். (2-250)

வன்னி வலம்

# பட்டா மரத்துடன் மோதுண்ட விபத்தில் சாரதி உயிரிழப்பு

(மல்லாவி)

ரம்பாவ எனும் இடத்தில் இருந்து வவுனியா அரிசி ஆலை ஒன்றிற்கு அரிசிமூட்டைகளை ஏற்றிப் பயணித்த பட்டா ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியின் அருகாமையில் இருந்த மரத்துடன் மோதுண்ட விபத்துச் சம்பவத்தில் அதன் சாரதி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் மதவாச்சி பூனாவை எனும் இடத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

ரம்பாவ என்ற இடத்தில் இருந்து வவுனியா அரிசி ஆலைக்கு அரிசி மூட்டைகளை ஏற்றிப் பயணித்தபோது இந்த விபத்துச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கல்குனாமடு பிரதேசத்தைச் சேர்ந்த அபல் தாரக்க சஞ்சீவ விமலசேன வயது - 33 என்ற இளம் குடும்பஸ்தரே சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற மதவாச்சி பொலிஸார் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளதுடன், விபத்துக்குள்ளான வாகனத்தை மீட்டெடுத்து மதவாச்சி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# தேவைகள் அதிகமாக இருக்கின்றன போதிய அளவு நிதிவசதி இல்லை

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற வீதிகள் மிக மோசமான நிலையில் புனரமைக்க வேண்டிய தேவையுள்ளது.

வீட்டுத்திட்டம், வாழ்வாதாரம், யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட ஆயிரக்கணக்கான பெண்கள், காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகளின் குடும்பங்கள் உட்பட நிறைய தேவைகள் உள்ளன என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அரச அலுவலர்களை அறிவுறுத்தும் வேலைத் திட்டமாகிய "நில மெகவர" தேசிய வேலைத்திட்டம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் அண்மையில் வவுனியாவில் இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேவைகள் அதிகமாக இருக்கின்ற எங்களது பிரதேசம் போரினால் பாதிக்கப்பட்டது என்ற அடிப்படையிலே மக்களிற்கான தேவைகள் நிறையவே இருக்கின்றன.

ஆனால் அத்தேவைகளை பூர்த்தி செய்வதற்கான தடைகளை நீங்களும் நாங்களும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம்.

எமது மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் உள்ளூராட்சி மன்ற வீதிகள் மிக மோசமான நிலையில் புனரமைக்க வேண்டிய தேவையுள்ளது. வீட்டுத்திட்டம், வாழ்வாதாரம், யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பெண்களை தலைமையாக கொண்ட ஆயிரக்கணக்கான பெண்கள், காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகளின் குடும்பம் உட்பட நிறைய தேவைகள் உள்ளன.

இப்பணிகளை செய்வதிலே மக்கள் மத்தியில் நீங்களும், நாங்களும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மிக கடினமானது. மக்களுக்கும் எங்களுக்கும் இடையிலே பாரிய இடைவெளி இருக்கின்றன. அவர்கள் எதிர்பார்க்கின்ற விடயங்கள், தேவைகளை ஒரு கட்டத்திலே பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உங்களுக்கும், எங்களிற்கும் ஒரு கடுமையான விமர்சனங்களிற்கு உள்ளாக வேண்டிய தேவை இருக்கின்றது. அந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மத்திய, மாகாண அரசுகள் போதியளவு நிதி வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதிகாரங்களை பகிர்ந்தளிக்க வேண்டிய தேவை இருக்கிறது. இந்த இரண்டையும் முழுமையாக நிறைவேற்றினால் தான் நாங்கள் மக்கள் மத்தியிலே சென்று அவர்களுடைய பணிகளை திருப்திகரமாக செய்ய முடியும்.

பல நெருக்கடிகள், பல சவால்கள் இருக்கின்றன. எல்லோரையும் எல்லா சந்தர்ப்பத்திலும் திருப்திப்படுத்த முடியாத சந்தர்ப்பம் இருந்தாலும் முடிந்தளவிற்கு போரினால் பாதிக்கப்பட்ட எங்களது மக்களிற்கு ஏற்ற பணிகளை இணைந்து செய்வோம் என்றார். (2-250)

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஒரு வாரத்தினுள் ஜனாதிபதி செயலகத்திற்கு 6 ஆயிரத்து 700 கடிதங்கள் அனுப்பி வைப்பு





(குருமன்காடு)

வவுனியா பிரதான தபாலகத்தின் ஊடாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு ஒரு வாரத்திற்குள் ஆறாயிரத்து 700 கடிதங்கள் இதுவரை அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும் எந்த பதிலும் வரவில்லை என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கான தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுத்திருக்கும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்று 26 ஆவது நாளாகவும் வவுனியா ஏ-9 வீதியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முன்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசாங்கத்தை பொறுப்பு கூற வலியுறுத்தியும், அவர்களுக்கு நடந்தது என்ன என்பதை தெரிவிக்க கோரியும் நாள் ஒன்றுக்கு ஆயிரம் கடிதங்கள் வீதம் அனுப்பப்பட்டு இதுவரை ஆறாயிரத்து 700 கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. தொடர்ந்தும் கடிதம் அனுப்புவதற்காக கடிதங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. இருந்தும் எந்தவொரு பதிலையும் இதுவரை அனுப்பவில்லை என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். (2-250)

# இராணுவத்தினரிடம் ஒப்படைத்த பிள்ளைகளுக்காக காத்திருக்கின்றோம்

## முல்லையில் உறவுகளின் போராட்டம் தொடர்கின்றது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்று வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் நேற்று 14 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

இந் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுக்கும் போராட்டம் இதுவரை எந்தவொரு தீர்வும் முன்வைக்கப்படாத நிலையில் இரவு பகலாகத் தொடர்கின்றது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது எனவும் உறவுகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த நிலையில் தமது பிள்ளைகள் தொடர்பில் உரிய தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (2-15-281)

# உயிரிழை அமைப்பின் தலைமை அலுவலகம் மாங்குளத்தில் 30 ஆம் திகதி திறக்கப்படும்



(பனிக்கன்குளம்)

வடக்கு-கிழக்கு ஆகிய மாகாணங்களில் இடம்பெற்ற யுத்தம் மற்றும் பிற காரணங் ளால் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்துவரும் உயிரிழை அமைப்பின் புதிய அலுவலக கட்டடம் ஏ-9 வீதி, மாங்குளத்தில் திறந்து வைக்கப்படவுள்ளதாக உயிரிழை அமைப்பின் தலைவர் வி. ஜெயகாந்தன் குறிப்பிட் டுள்ளார்.

கனடா பிரம்ரன் தமிழ் ஒன்றியம், பிரம்ரன் தமிழ் முதியோர் அமைப்பு, கனடா, சுவிஸ் மற்றும் பிரான்ஸ் நாடுகளில் வசிக்கும் புலம்பெயர் தமிழ் மக்கள் உட்பட பலரது நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்டுள்ள குறித்த கட்டடம் எதிர்வரும் 30ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வவுனியாவில் 24 பேரும் முல்லைத்தீவில் 50 பேரும் கிளிநொச்சியில் 46பேரும் மன்னாரில் 12பேரும் யாழ்ப்பாணத்தில் 37 பேரும் உதவித் தொகையைப் பெறுகின்றனர்.

அதேவேளை கிழக்கு மாகாணத்தில் 21 பேர் இந்த உதவித்தொகையைப் பெற்று வருவதாக அந்த அமைப்பு கூறுகின்றது. (2-81)

# கிளிநொச்சியில் ஒருமாத காலமாக காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தாயொருவர் மயங்கி சரிந்தார்








கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கடந்த மாதம் 20ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்றுடன் ஒரு மாதமாக உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தாயொருவர் திடீரென நேற்றுக்காலை மயக்கமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து வடக்கு மாகாண நோயாளர் காவு வண்டிக்கு அவசர தொலைபேசி இலக்கத்தினூடாக தகவல் வழங்கப்பட்டது. அங்கு அடுத்த சில நிமிடங்களில் விரைந்த வடக்கு மாகாண நோயாளர் காவு வண்டியின்மூலம் தாயார் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

பிரஸ்தாப தாயார் காணாமல் ஆக்கப்பட்ட தனது பிள்ளையின் நினைவுகள் வரும் போதெல்லாம் இவ்வாறு மயக்கமடைபவர் என்பதுடன் இதற்காக பிரத்தியேக வைத்தியர்மூலம் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(2-15-254-312)

# பயன்படுத்த முடியாத துப்பாக்கி ரவைகள் வித்தியாலய வளாகத்திலிருந்து மீட்பு





(மல்லாவி )

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் கீழுள்ள வவு/ தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலய வளாகத்தில் பயன்படுத்த முடியாத துப்பாக்கி வைகள், வெடித்த குண்டின் பகுதிகள் என்பன மீட்கப் பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

பாடசாலையின் வகுப்பறைக்கு வெளியே பூக்கன்றுகள் நடுவதற்காக மாணவர்கள் கிடங்கினை வெட்டிய போது வெடி பொருட்களின் வெற்றுக் கோதுகளும் மற்றும் பழுதடைந்த நிலையில் துப்பாக்கி ரவைகளும் காணப் பட்டுள்ளன.

இதனை அடுத்து பாடசாலை அதிபரினால்வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு தகவல்வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையினருடன் பாடசாலைக்கு வருகை தந்த பொலிஸார், நிலத்தை ஆழப்படுத்திய போது பழுதடைந்த நிலையில் காணப்பட்ட வெடி பொருட்களின் மேலும் ஒரு தொகுதி வெற்றுக் கோதுகளை மீட்டுள்ளனர்.

இந்த பாடசாலை கடந்த யுத்த காலத்தில் இராணுவத்தினரின் பிரதரன இராணுவ முகாமாக செயற்பட்டிருந்த நிலையில் கடந்த 2000 ஆம் ஆண்டளவில் விடுதலைப் புலிகளினால் இராணுவத்தினர் மீது நடத்திய "செய் அல்லது செத்துமடி" தாக்குதலின் பின்னர் இப்பகுதியில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியிருந்தனர்.(2-15)

# வற்றாப்பளை அம்மன் ஆலய பங்குனித் திங்கள் உற்சவம்



வரலாற்றுச்சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பங்குனி திங்கள் முதலாவது திங்கள் உற்சவம் நேற்று முந்தினம் நடைபெற்றது.

பங்குனித் திங்கள் விரதம் பெண்களால் கடைப்பிடிக்கப்படுவது வழக்கம். இந்நாளில் அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுவர்.

சிறப்பாகக் கண்ணகை அம்மன் ஆலயங்களில் பங்குனித் திங்களில் பொங்கல் வழிபாடு நடைபெறுவது வழக்கம்.

இந்த நிலையில் முதலாவது திங்களான நேற்று முன்தினம் பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் ஆலயத்துக்கு வருகைதந்து பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டிருந்ததோடு தமது நேர்த்திக்கடன்களையும் சுட்டெரிக்கும் வெயிலுக்கு மத்தியிலும் செலுத்தியிருந்தனர்.(2-281)




# கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் வேள்வி

கிளிநொச்சி மாவட்டம் குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித்திங்கள் வேள்வி எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் இரவு மறுநாள்அதிகாலைவரை வழமை போல் சிறப்பாக நடைபெறவுள்ளது.

பொங்கல்விழா நிகழ்வுகளாக அபிஷேகம்,கொடியேற்றுதல், பூசைகள்,மகேஸ்வர பூசை ,காவடி, பாற்செம்பு கர்ப்பூரச்சட்டி நேர்த்திகள் பறவைக்காவடி, சிறப்பு நிகழ்ச்சிகள், பொங்கல், காவடி, தீமிதிப்பு,அதிகாலை விசேட பூசை, நீர்ச்சோறு வழங்கல் ஆகியன இடம்பெறவுள்ளன.

அடியார்கள் திங்கட்கிழமை பகல்இரவு முழுநாளும் காவடி, பாற்செம்பு, கர்ப்பூரச்சட்டி எடுத்தல் போன்ற நேர்த்திகள் அர்ச்சனைகள் செய்துகொள்ளலாம்.

அன்னதானப் பொருட்கள், பூசைப்பொருட்கள் திருப்பணிநிதி போன்றவற்றை ஆலய அறங்காவலரிடம் மட்டும் கொடுத்துப் பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். வேறு எவருக்கும் நிதிப்பொருட்கள் சேர்க்க அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அர்ச்சனைப் பொருட்கள் ஆலய வளர்ச்சி கருதி அறங்காவலர் அவையினரால் விற்பனை செய்யப்படுமெனவும் வணிக நிறுவனங்கள் கடை அமைப்பதற்கான ஏலம் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை , மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல்10 தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அனைத்து இடங்களிலிருந்தும் போக்குவரத்துச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் வேள்வி விழாவுக்குத் தேவையான பொருட்கள், அன்னதானத்திற்குத் தேவையான அரிசி, மரக்கறி, தேங்காய், வாழையிலை போன்ற பொருட்களையும் ஆலயத்தில் கொடுத்துதவுமாறும் ஆலய அறங்காவலர் சபையினரால் அறிவிக்கப் பட்டுள்ளது. (2-254)

# பெரியமடு நெல் அறுவடை விழா





மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களப் பிரிவிலுள்ள விடத்தல் தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களப் பிரிவிற்குட் பட்ட பெரியமடு கிழக்கு கிராம கமக்கார அமைப்பினாலும் மற்றும் கிராம மட்ட ஏனைய பொது அமைப்புக்களினாலும் ஏற்பாடு செய்யப்பட்ட "நெல் அறுவடை விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

1956 ஆம் ஆண்டு முதல் குடியேற்றம் நடைபெற்றுள்ள பெரியமடுக் கிராமத்தின் 60, ஆவது ஆண்டு நிறைவு விழாவின் முதல் நெல் அறுவடை விழா நிகழ்வு நடைபெற்றுள்ளது.

பெரியமடுக் குளத்தின் கீழ் 950 ஏக்கர் நெற்செய்கை காணி உள்ள போதும் தற்போது 500 ஏக்கர் காணியில் மட்டுமே விவசாயிகள் நெற்செய்கை மேற்கொள்கின்றார்கள்.

மிகுதி நிலங்கள் நாட்டில் இடம்பெற்ற போராட்டம் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து சென்றமையால் தரிசு நிலக்காடுகளாக மாறியுள்ளன. இவற்றை புனரமைப்புச் செய்து தருமாறு விவசாயிகள் நேற்றுமுன்தினம் வடக்கு விவசாய அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெல் அறுவடை விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் மற்றும் வடக்கு மாகாண போக்குவரத்து மற்றும் மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள். (2-15-281)

# நீர்வளம் தொடர்பான நெருக்கடியும் மக்கள் விழிப்புணர்வும்




அறிமுகம்
**(Introduction)**

சர்வதேச உலகநீர் தினமானது பங்குனி மாதம் 22ஆம் திகதி வருடம் தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற சூழலும் அபிவிருத்தியும் என்ற சர்வதேச மாநாட்டில் (UNCED) எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் 1993 ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகின்றது.

தூய நீர் தொடர்பாக அதன் பயன்பாடு, அருமைத்தன்மை என்பவற்றைக் கருத்திற் கொண்டு நிலைத்திருக்கக் கூடியநீர் வளப் பயன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளும் முகமாக ஒவ்வொரு வருடமும் நீர் தொடர்பாக சர்வதேச நாடுகள் மத்தியில் ஏற்படும் நெருக்கடியான மற்றும் பிரச்சினையான விடயங்களைக் கருத்திற்கொண்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் ஒவ்வொரு வருடமும் ஒரு தொனிப்பொருளை முன்வைத்து இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன்படி 2017இற்கான தொனிப் பொருளாக "கழிவுநீர்" (waste water) என்பதை முதன்மைப்படுத்தியுள்ளது.



நீர் தின தொனிப் பொருள் **(Theme of the Water Day)**

இத்தொனிப்பொருள் ஐக்கியநாடுகள் சபையால் முன்வைக்கப்பட்ட நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்கு (Sustainable Development Goals) என்பதில் 6ஆவது இலக்காக நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் தூயநீரும் சுகாதாரமும் (Clean Water and Sanitation) என்பது வலியுறுத்தப்பட்டிருந்தது. இதில் 6ஆவது இலக்கில் 2030 இல் நீர் தொடர்பாக சர்வதேச ரீதியில் அடையப்படவேண்டிய இலக்குகள் 8 கூறப்பட்டுள்ளது. இதில் 6 ஆவது இலக்கில் 3ஆவது விடயமாக மையப்படுத்திய அம்சத்தைக் கருப்பொருளாகக் கொண்டு இவ்வாண்டுக்கான நீர் தின தொனிப் பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் கைத்தொழிற்சாலைகள், நகரங்கள், வீடுகள், விவசாய நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு அளவுக்கதிகமான நீர் பயன்படுத்தப்பட்டு கழிவுநீராக வெளியேற்றப்பட்டு வருகின்றது. எனவே இவ்வாறு வெளியேற்றப்படும் நீரைப் பாதுகாப்பான முறையில் சுத்திகரிக்கப்பட்டு மீள் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்கின்ற தொனிப் பொருளில் இவ்வாண்டு நீர் தின தொனிப்பொருள் அமைந்துள்ளது.

நீரின் பரம்பல்
**(Distribution of Water)**

பூகோள நீரின் பரம்பல் வேறுபாடான அளவில் பரம்பிக் காணப்படுகின்றது. இதில் உவர்நீரின் பரம்பல் 97.5% (சமுத்திரநீர் மற்றும் ஏனைய உவர் நீர் பரம்பல்) நன்னீரின் பரம்பல் 2.5% ஆகவும் காணப்படுகின்றது. நன்னீர்ப் பரம்பலை 100% ஆக கொள்ளுவோமேயானால் 68.7% ஆன நீர் முனைவுப் பகுதிகளில் பனிக்கட்டிக் கவிப்புக்களாகவும் 30.1% தரைக்கீழ் நீராகவும் 1.2% மேற்பரப்பு நன்னீராகவும் காணப்படுகின்றது. நன்னீராக பரம்பியிருக்கும் நீரில் மிகச் சிறிய அளவே பயன்பாட்டிற்கு உகந்ததாக காணப்படுகின்றது (0.3%). நாடுகளிடையே நன்னீரின் பரம்பலில் வேறுபாடு காணப்படுவதும், அதேவேளை பூகோள வெப்பமயமாதலினால் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தின் தாக்கமும் பெரும்பாலான நாடுகளை நீர் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருப்பதுடன், இனிவரும் காலங்களில் இதன் தாக்கம் மேலும் பன்மடங்காக அதிகரிக்கும் அபாயநிலை காணப்படுகின்றது.

நீர் நெருக்கடி **(Water Crisis)**

நீர் நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் கண்டமாக ஆபிரிக்காக் கண்டம் காணப்படுவது யாவரும் அறிந்ததே. இங்கு உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) மற்றும் ஐ.நா. உணவு வழங்கும் அமைப்புக்களின் அறிக்கையின்படி இங்குள்ள மக்கள் பாதுகாப்பற்ற குடிநீரினால் நீர்மூலம் பரவும் நோய்களுக்கு ஆளாகி அதன் மூலமான இறப்புக்கள் அதிகரிப்பதாகச் சுட்டிக் காட்டியுள்ளது. தூய பாதுகாப்பான குடிநீரின் கிடைப்பனவு என்பதைவிட நீர்ப் பற்றாக்குறை என்பது மிகவும் பிரதான பிரச்சினையாகக் காணப்படுகிறது. அதிக வறட்சி, உள்நாட்டு குழப்பம், உணவுப் பற்றாக்குறை, பாதுகாப்பற்ற குடிநீர், நோய்த் தாக்கம் என்பன ஒன்றாகச் சேர்ந்து ஆபிரிக்காவில் குறிப்பாக சோமாலியா, நைகர், மாலி போன்ற நாடுகளில் பட்டினிச் சாவு அதிகரித்து வருவதற்கு காரணமாய் உள்ளது.

எமது அண்டை நாடான இந்தியாவை எடுத்துக்கொண்டால் பல நீண்ட ஆறுகள் வேறுபட்ட மாநிலங்களை ஊடறுத்துச் செல்லும் போது, மாநிலங்களிடையே நதி நீர்ப் பங்கீடு தொடர்பான பிரச்சினை அடிக்கடி ஏற்படுகின்றது. இதனால் ஓர் மாநிலம் மேலதிக நீர் வளத்தைக் கொண்டிருக்க அயல் மாநிலம் நீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டு வறட்சி நிலையை எதிர்நோக்கி வருகின்றது.

இது தொடர்பில் எமது பிரதேசமும் விதிவிலக்கல்ல. இலங்கையின் 103 ஆறுகள் பல்வேறு மாவட்டங்களினூடாகப் பாய்ந்து கடலைச் சென்றடைகின்றது. எனினும் நன்னீர் பரம்பலில் பிரதேசங்களுக்கிடையே வேறுபாடு காணப்படுகின்றது. எமது நாட்டில் பெரியதும் சிறியதுமாக 103 ஆறுகள் பாய்கின்ற போதும் யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை மேற்பரப்பு நீர் வளத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆறுகள் என்பது கிடையாது. வழுக்கையாறானது பருவகால ஆறாகமட்டும் காணப்படுகின்றது. எமது பிரதேசத்தில் நாளாந்த வீட்டுப் பாவனையிலிருந்து விவசாயம் மற்றும் சிறுகைத்தொழில் நடவடிக்கை போன்ற அனைத்திற்கும் தரைக்கீழ் நீரையே பயன்படுத்தி வருகின்றோம்.

தரைக்கீழ் நீர் வளத்தின் பிரதான மூலமாக மழைவீழ்ச்சியே காணப்படுகின்றது. தற்போது காலநிலை மாற்றத் தாக்கத்தின் விளைவாக மாரிகாலம் என்று கூறப்படும் காலப்பகுதி குறுக்கமடைந்து வருவது யாவரும் அறிந்ததே. அதன் காரணமாக மழை கிடைக்கும் நாட்களின் அளவு குறைவடைந்து வருகின்றது. இதனால் குறுகிய காலத்தில் கிடைக்கும் மழைநீரே தரைக்குக் கீழ் சேகரிக்கப்பட்டு தரைக் கீழ் நீர் வளமாக வருடம் பூராகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இக் குறுகிய காலத்தில் சேகரிக்கப்பட்ட நீர்ச் சேமிப்பை அளவுக்கதிகமாக விழிப்புணர்வின்றி பயன்படுத்துவதாலேயே தரைக்கீழ் நீர்ச் சேமிப்பு குறைவடைந்து நீர் உவராக்கம் அடைய காரணமாகின்றது. இப்பிரச்சினை தொடர்பாக ஆங்கிலேயே ஆட்சிக்காலத்திலிருந்தே கவனத்தில் கொள்ளப்பட்டு பல்வேறு திட்ட முன்மொழிவுகள் அமுல்படுத்தப்பட்டன. இலங்கைக்கு வந்த இஸ்ரேலிய நீரியல் நிபுணர் அறோன் அறட் (Aron Arad,1965) என்பவர் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வளம் தொடர்பில் கருத்து வெளியிடுகையில், பொருத்தமான நீர் வளமுகாமையினை முன்னெடுக்காவிட்டால் இது பாலைவனமாக மாறும் என எச்சரித்திருந்தார். இந்நிலைமையினை நாம் தற்போது உணர தலைப்பட்டுள்ளோம். யாழ்.மாவட்டத்தில் தீவகப் பகுதிகள் மற்றும் கரையோரங்களை அண்டிய பகுதிகள் கூடுதலாக உவர்நீர் ஊடுருவலால் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றது.

அண்மைய பத்திரிகைச் செய்தியில் பூநகரியின் பல கிராமங்கள் உவரடைந்ததன் தொடர்ச்சியாக கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் போன்ற கிராமங்கள் உவரடைந்து வருவதாகவும், மண்டைக்கல்லாறு வழியாக கடல் நீர் உட்புகுவதால் ஆயிரம் வரையான குடும்பங்கள் நீர் நெருக்கடியை எதிர்கொள்வதாகவும் மக்கள் இடப்பெயர்வும் இப்பிரதேச பாடசாலை ஒன்றும் மூடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் மண்டைக்கல்லாற்று நீரை பொருத்தமான முறையில் பயன்படுத்தக் கூடிய நீர்வள முகாமைத்துவம் என்பது அவசியமாகக் காணப்படுகின்றது.

நீர்வளம் பேணுகை தொடர்பாக காலத்திற்கு காலம் பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்ட போது வெற்றியும் தோல்வியும் ஏற்பட்டது தெரிந்ததே. அவ் வகையில்,

- யாழ். கடல் நீரேரித் திட்டம் (Jaffna Lagoon Scheme)
- ஆறுமுகம் திட்டம் - யாழ்ப்பாணத்திற்கான ஆறு (River for Jaffna)
- குளப்புனரமைப்புத் திடடங்கள் (Ponds Reconstruction Projects)
- மழைநீர்ச் சேகரிப்புத்திட்டம் (Rain water harvesting)
- உவர் நீர்த் தடுப்பணைகள் (Salt water Exclusion scheme)
- வழுக்கையாற்று வடிநிலத்திட்டம் (Valukkai Aru Drainage Scheme)
- யாழ்.- கிளிநொச்சி குடிநீர் விநியோக மற்றும் சுகாதாரத்திட்டம் (இரணைமடு குடிநீர் விநியோகத் திட் டம்)- (Jaffna- Kilinochchi Water Supply and Sanitation Scheme)
- கடல்நீரை நன்னீராக்கும் திட்டம்- (Desalination Project (RO plant) போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இதில் யாழ். கடல் நீரேரித் திட்டம், ஆறுமுகம் திட்டம் என்பன 1950களில் இருந்து முன்மொழியப்பட்டவை. அவற்றில் கடல் நீரேரித்திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவை இரண்டும் தரைக்கீழ் நீர்ச் சேகரிப்பை அதிகரிப்பதற்காக முன்மொழியப்பட்ட திட்டங்களாகக் காணப்படுகின்றன. இத்திட்டங்களினூடாகத் தரைக்கீழ் நீர் வளத்தை அதிகரித்தாலும் விழிப்புணர்வற்ற விவசாயச் செயற் பாடுகளாலும் (அதாவது அளவுக்கதிக நைத்திரேற்றுப் பசளைகளையும் அளவுக்கதிக நீர்ப்பாவனையும்), முறையற்ற கழிவகற்றல் செயற்பாடுகளாலும் சேமிக்கப்பட்ட தரைக்கீழ் நீரை பயன்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு யாழ்.மக்கள் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இது அனைத்து மக்களும் உணரப்பட வேண்டிய ஓர் விடயமாகவுள்ளது. நாளாந்தம் மக்கள் மாசடைந்த தரைக் கீழ் நீரை உள்ளெடுப்பதனால் ஏற்படும் உடல் நலப் பாதிப்பைக் கருத்திற் கொண்டு தூய்மையான சுத்திரகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திற்கான முன்னெடுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றில்

- இரணைமடு-யாழ். நீர் விநியோகத்திட்டம்
- கடல்நீரை நன்னீராக்கும் திட்டம்

இவ் இரு திட்டங்களுமே பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் பொதுமக்கள் அமைப்புக்களினது ஆதரவின்றி அதனைச் செயற்படுத்துவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது யாழ்.குடாநாட்டிற்கான நீர் நெருக்கீட்டை சமாளிப்பதற்காக கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தின் ஆய்வுப்பணிகள் முடிவடைந்து சம்பந்தப்பட்ட பொது அமைப்புக்களினது (பங்குதாரர்கள்) கருத்தறியும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இத் திட்டம் தொடர்பாகவும் வேறுபட்ட அமைப்புக்களிடையே கருத்து முரண்பாடுகள் காணப்படுவதை அறிந்துகொள்ள முடிகின்றது. இதேவேளை கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் யாழ். மாவட்டத்தில் முதன் முதலாக நெடுந்தீவில் ஆரம்பிக்கப்பட்டு சிறந்த முறையில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது நெடுந்தீவு மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகக் காணப்படுவதுடன், தற்போது பல்வேறுபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஓர் திறவுகோலாகவும் இத்திட்டம் காணப்படுகின்றது

முடிவுரை **(Conclusion)**

எந்த ஓர் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தும் போதும் அத்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்கை அடைய எத்தனிக்கும் போது அத்திட்டத்தினால் சில எதிர்மறையான விளைவுகளும் ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாது. இவ்வாறு நீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலில் சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்ற நிலையில் யாழ்.குடா நாட்டின் தரைக்கீழ் நீரை பயன்படுத்தும் பெருமளவிலான மக்கள் தாம் தூய்மையற்ற மாசடைந்த நீரையே பருகுகின்றோம் என்பதை உணராமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் மக்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

சூழல் சம்பந்தமான எந்தவொரு செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் போது மக்களின் பங்களிப்பின்றி வெற்றியளிக்காது. இந்நிலையில் யுத்தத்திற்கு பின்னரான யாழ்.மாவட்ட துரித அபிவிருத்தியில் நீர் நெருக்கடிக்கு முன்னுரிமை கொடுத்து தூய்மையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து அமைப்புக்களும் கருத்தொருமித்து செயற்படுவதனூடாக நீர் முகாமைத்துவத்தில் வினைத்திறனானதும் நீரை உத்தமமாக பயன்படுத்தக் கூடியதுமான ஒருசமூகத்தைக் கட்டிஎழுப்ப ஒன்றிணைவோம்.

திருமதி பிரதீபா விபுலன்
முதுநிலை விரிவுரையாளர்
புவியியற்றுறை யாழ்.பல்கலைக்கழகம்.




# மாணவனின் கையில் கர்ப்பூரம் கொளுத்திய ஆசிரியைக்கு இடமாற்றம்

மாணவனின் கையில் கர்ப்பூரத்தைக் கொளுத்திய ஆசிரியைக்கு, இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக, ஹற்றன் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

மாணவி ஒருவரின் பணத்தைத் திருடிய சந்தேகத்தில், ஆசிரியை ஒருவர், மாணவர்கள் அறுவரின் கைகளில் கர்ப்பூரத்தைக் கொளுத்திய சம்பவமொன்று, பொகவந்தலாவ பிரதேச தமிழ்ப் பாடசாலையொன்றில் இடம்பெற்றுள்ளது.

பொகவந்தலாவை ரொப்கில் தமிழ் வித்தியாலயத்திலேயே, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்காரணமாக, மாணவரொருவரின் வலது கையில் எரிகாயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி பாடசாலையில் தரம் 3இல் கல்வி பயின்று வரும் மாணவர்களே, இவ்வாறு பாதிப்படைந்துள்ளனர். இச்சம்பவத்தையடுத்து, மாணவர்களின் கையில் கர்ப்பூரம் கொளுத்திய ஆசிரியையை இடமாற்றக்கோரி, பொகவந்தலாவ ரொப்கில் தோட்ட மக்கள், காலை ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில், பொகவந்தலாவை பொலிஸார் மற்றும் ஹற்றன் வலயக் கல்வி பணிமனையின் அதிகாரிகள், விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணைகளின் பின்னரே, மேற்படி ஆசிரியைக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக ஹற்றன் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் தெரிவித்தார்.(இ-7)

## விமல் இல்லாமை பெரும் நட்டம் பசில் ராஜபக்ஷ கவலை

நல்லாட்சி அரசாங்கத்துக்கு எதிராக, 25ஆம் திகதி காலியில் இடம்பெறவுள்ள எதிர்ப்புப் போராட்டத்துக்கு விமல் வீரவன்ச எம்.பி இல்லாதது, பெரும் நட்டமாகும் என்று, அமைச் சின் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். அதுமட்டுமன்றி, அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை, தாய் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் மிகப் பெரிய நட்டமே என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை விமல் எம்.பியின் வழக்குக்கு வந்திருந்த அவரிடம், கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு வெளியே ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BIDS

**Construction of Two Storied Lecture Hall for Vavuniya Campus, University of Jaffna**

1. **The Chairperson, Department Procurement Committee (DPC), University of Jaffna** on behalf of the **University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for "Construction of Two Storied Lecture Hall for Vavuniya Campus, University of Jaffna" as described below and estimated to cost of **Rs. 39.2 million(excluding VAT).**
The construction period is **273Days.**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C5** or above with the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone. Tel: 021-2219201, Fax: 021-2219201
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, from **22nd March 2017** until **17th April 2017** from **9:00hrs to 15:00hrs** working days upon payment of non refundable fee of Rupees Eight Thousand **(Rs. 8,000/-).**
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Registrar's office** to reach **on or before 14:00 hrs on the 18th April 2017.** Bids will be opened soon after closing at **14.00 hrs on the 18th April 2017** at the same venue in the presence of the bidders representatives who choose to attend.
7. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - In favour of **Vice Chancellor-University of Jaffna.**
   - For an amount of **Rs. 600,000.00**
   - Valid up to119 days up to **15th August, 2017 (119 days** from the closing date of Bid).
   - Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.
9. Pre bid meeting will be held at 10:00 hrs on **05th April2017** at the Board Room of the Vavuniya Campus, Pampaimadu.

**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna**
**20.03.2017**

(C-7869)

'தெய்வத்தின் திருப்பாதத்தில்! அனுமதி இலவசம்!

# ஆசீர்வாத பெருவிழா!

இயேசு ஜீவிக்கிறார் பணியின் 39 ஆவது சுவிசேஷ மாநாடு!

அன்புடையீர்!

அண்டசராசரத்தை ஆளுகை செய்யும் கடவுள் ஒருவர் இருக்கிறார். அவருடைய வல்லமையை அளவிட முடியாது. அவரே தொடக்கமும் முடிவுமானவர். ஜீவியத்தில் நோய், துன்பம், கண்ணீர், சஞ்சலம் தோஷங்களிலிருந்தும் விடமுடியாத பழக்கவழக்கம், பாவ வாழ்க்கை, பொல்லாத ஆவிகளின் கட்டுகள், செய்வினை, மாந்திரீகம், பில்லிசூனியத்திலிருந்தும் விடுதலை பெற இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நோக்கி வருகிறது. இச்சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். இன்றே அற்புதத்தின் நாள், இன்றே இரட்சண்ணியத்தின் நாள், இன்றே அனுக்கிரகத்தின் நாள், உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

2017 மார்ச் 24,25,26 மாலை 5.00 மணி

தெய்வீக சுகத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வாருங்கள்!

இடம்:- மாநகரசபை மைதானம், வவுனியா

செய்தி:- கலாநிதி M.R. இராஜேந்திரம் மற்றும் C.V. இராஜேந்திரம்

(8339)

39 வது அகில இலங்கை வேதாகம கருத்தரங்கு

மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 முதல் 3.00 மணிவரை.

இடம்:- இல. 18, டேங்க் ஒழுங்கை, இரம்பைக்குளம், வவுனியா.

மேலதிக தொடர்புகளுக்கு:- இயேசு ஜீவிக்கிறார் ஆலயம் 401, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15, தொ.இ. 011 252 2608

## ஊழல் குற்றச்சாட்டில் சிக்கி பதவியிழந்த

# முன்னாள் ஜனாதிபதி விசாரணைக்கு ஆஜர்

## மக்களிடம் மன்னிப்புக் கேட்டார்



(சியோல்)

ஊழல் குற்றச்சாட்டுகளால் ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்கப்பட்ட பார்க் கியூன் ஹே தென்கொரிய அரசின் தலைமை சட்டத்தரணி முன் விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளித்தார்.

தென்கொரியாவில் ஜனாதிபதி பார்க் கியூன் ஹே தலைமையிலான அரசின் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் பெருகிவருகிறது. ஜனாதிபதியின் நெருங்கிய தோழியான சோய் சூன் சில் அரசு விவகாரங்களில் தலையீடு செய்ததாகவும், அரசின் மிக முக்கிய இரகசிய கோப்புகளை ஆய்வு செய்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

மேலும், ஜனாதிபதியுடன் தனக்கு இருக்கும் நெருக்கத்தை பயன்படுத்தி, பல நிறுவனங்களிடம் இருந்தும் நன்கொடைகளைப் பெற்று, இவர் ஆதாயம் அடைந்தார். இதை அந்நாட்டின் எதிர்க் கட்சிகள் ஆதாரங்களுடன் குற்றம் சுமத்தின.

இதையடுத்து, கடந்த மாதம் முதலாம் திகதி சோய் சூன் சில் கைது செய்யப்பட்டார். மேலும், ஜனாதிபதி பார்க் கியூன் ஹே உடனடியாக பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையுடன் சுமார் 13 இலட்சம் மக்கள் பங்கேற்ற பேரணியும் ஆர்ப்பாட்டமும் சியோல் நகரில் கடந்த ஆண்டில் நடைபெற்றது.

இதையடுத்து, பாராளுமன்றத்தில் பார்க் கியூன் ஹேவுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டு கடந்த 10 ஆம் திகதி அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில், பார்க் கியூன் ஹே மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும். அந்நாட்டின் இலஞ்ச ஊழல் தடுப்பு கண்காணிப்பகம் நோட்டீஸ் அனுப்பி இருந்தது.

அதன்படி, சியோல் நகரில் உள்ள இலஞ்ச ஊழல் தடுப்பு கண்காணிப்பக அலுவலகத்தில் அவர் ஆஜரானார்.

சுமார் 10 நாட்களுக்கு பின்னர் நேற்று பொது மக்களிடையே தோன்றிய முன்னாள் ஜனாதிபதியை காண அவரது ஆதரவாளர்களும், ஊடகவியலாளர்களும் அங்கு குவிந்திருந்தனர்.

நீதிமன்ற வளாகத்தின் பத்தாவது மாடியில் இருந்த அறையில் விசாரணை அதிகாரிகள் மற்றும் தென்கொரிய அரசின் தலைமை சட்டத்தரணிகளின் கேள்விகளுக்கு பதிலளித்த பார்க், அந்தக் காட்சியை வீடியோ படம் எடுக்க வேண்டாம் என கேட்டுக் கொண்டதாக தெரிகிறது.

முதல்நாள் விசாரணை முடிந்து கீழே இறங்கி வந்த பார்க், மக்களிடம் நான் மன்னிப்புக் கேட்டு கொள்கிறேன். நடைபெற்று வரும் இந்த விசாரணைக்கு நேர்மையான முறையில் ஒத்துழைப்பு அளிப்பேன் என்றும் தெரிவித்தார். (இ-12)

## ட்ரம்ப் வெற்றியில் ரஷ்யா தலையீடா?

### எப்.பி.ஐ.புதிய தகவல்



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெறுவதற்காக ரஷ்ய அரசு சில முயற்சிகள் மேற்கொண்டதாக வெளிவந்துள்ள குற்றச்சாட்டு குறித்து விசாரித்து வருவதாக எப்.பி.ஐ தெரிவித்துள்ளது.

கடந்தாண்டு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறுவதற்காக ரஷ்ய உளவுத்துறை சில இரகசிய முயற்சிகள் மேற்கொண்டதாக அமெரிக்க ஜனநாயகக் கட்சி குற்றம் சாட்டியிருந்தது.

இதேபோல் ட்ரம்ப் உபயோகப்படுத்திய தொலைபேசிகளை ஒட்டுக்கேட்டதாக அவர், முன்னாள் ஜனாதிபதி ஒபாமா மீது புகார் கூறியிருந்தார்.

இந்நிலையில், இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அமெரிக்க உளவுத்துறை அமைப்பான எப்.பி.ஐ-இன் இயக்குநர் ஜேம்ஸ் கோமி கடந்த 2016 ஆம் ஆண்டில் நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் வெற்றியில் ரஷ்யா தலையீடு உள்ளதா? என்பது பற்றி விசாரித்து வருகிறோம்.

ட்ரம்ப் தனது தொலைபேசி உரையாடல்களை ஒபாமா நிர்வாகம் ஒட்டுக் கேட்டது என்று கூறுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப்பின் குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி ஒபாமா தொடர்ந்து மறுத்து வந்த நிலையில், தற்போது இதே புகாரை எப்.பி.ஐ. ஆதாரமற்றது என கூறியது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் ட்ரம்ப் வெற்றிக்கு ரஷ்ய உளவுத்துறை உதவியதாக வெளிவந்த புகாரை ரஷ்ய அரசும் மறுத்துள்ளது. (இ-12)




## குண்டுத் தாக்குதல்; 23 பேர் உயிரிழப்பு



(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இடம்பெற்ற கார்க்குண்டு தாக்குதலில் 23 பேர் உயிரிழந்ததுடன், பலர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸ் மற்றும் வைத்திய வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஷியா முஸ்லிம்கள் செறிந்து வாழும் நகரின் தென்மேற்கு பகுதியிலுள்ள அமில் மாவட்டத்திலேயே குறித்த தாக்குதல் சம்பவம் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட குறித்த தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

எனினும், இதற்கு முன்னார் ஐ.எஸ். தீவிரவாதிகள் இவ்வாறான தாக்குதல்களை தொடர்ந்து முன்னெடுத்து வந்திருந்த நிலையில், இதுவும் ஐ.எஸ். இன் தாக்குதலாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மொசூல் நகரை கைப்பற்ற அரச படையினர் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற நிலையிலேயே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, மோதல்களின் போது மேற்கு மொசூல் பகுதியில் வைத்து பொலிஸ் தலைமை அதிகாரி ஒருவரும், எட்டு பிற அதிகாரிகளும் தீவிரவாதிகளால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இவ்வாறாக தொடரும் மோதல்களின் எதிரொலியாக நகரின் மேற்கு பகுதியிலிருந்து கடந்த மாதத்தில் மாத்திரம் சுமார் ஒரு இலட்சத்து 80 ஆயிரத்திற்கும் அதிகமான பொது மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எட்டு இலட்சம் மக்கள் கொல்லப்பட்ட ருவாண்டா இனப்படுகொலைக்கு மன்னிப்புக் கேட்டார் போப்



(வாடிகன்)

சுமார் 8 இலட்சம் மக்கள் கொல்லப்பட்ட ருவாண்டா இனப்படுகொலைக்கு அப்போதைய கத்தோலிக்க சபை காரணமாக இருந்ததற்தாக போப் பிரான்சிஸ் கடவுளிடம் மன்னிப்பு கேட்பதாக கூறியுள்ளார்.

கடந்த 1994 ஆம் ஆண்டில் ருவாண்டா நாட்டில் டுட்சி இன மக்கள் மீது ஹுட்டு இனத்தவர்கள் தொடர்ந்து நடத்திய ஆயுதத் தாக்குதல் மூலம் இனப்படுகொலை செய்த போது சுமார் 8 இலட்சம் டுட்சி இன மக்கள் மற்றும் இன்னும் சில சிறுபான்மை இனத்தவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அந்நாட்டில் அப்போது இருந்த கத்தோலிக்க திருச்சபைகள் ஹுட்டு இனத்தவர்களுக்கு ஆதரவாக இருந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில், போப் பிரான்சிஸ், "சர்ச் மற்றும் அதன் நபர்கள் இழைத்த பாவங்களுக்கு கடவுளிடம் மன்னிப்புக் கேட்கிறேன்" என தெரிவித்துள்ளார். (இ-12)

## சூடானில் விமானம் விபத்து



தென் சூடானில் விபத்துக்குள்ளான விமானத்தில் பயணித்த யாரும் உயிரிழக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

தி சவுத் சுப்ரீம் எயர்லைன்சுக்கு சொந்தமான விமானம் தலைநகர் ஜுபாவில் இருந்து வட கிழக்கு நகரான வாவூவிற்கு நேற்றுக் காலை பயணித்தது.

வாவூ விமான நிலையத்தில் தரையிறக்கும் போது அது விபத்துக்கு உள்ளாகியது. அதில் பயணித்த 40 இற்கும் அதிகமான பயணிகளில் பலர் உயிரிழந்திருக்கலாம் என முதலில் அஞ்சப்பட்டது.

எனினும் எந்தப் பயணியும் உயிரிழக்கவில்லை என வாவூ விமான நிலைய இயக்குநர் தெரிவித்துள்ளார்.

விபத்துக்கு உள்ளாகி தீப்பற்றிய விமானத்தில் இருந்து 7 பேர் அவசர சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், மூவரின் நிலை மோசமாக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. (இ-12)

## நைஜீரியாவில் தற்கொலைத் தாக்குதல் 7 பேர் உயிரிழப்பு

நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள மைடுகுரி நகரின் அருகே போகோஹராம் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த மூன்று தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய தற்கொலை குண்டு தாக்குதலில், பொதுமக்கள் நால்வர் உட்பட 7 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர்.

பலர் படுகாயம் அடைந்த நிலையில் அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மைடுகுரி நகரில் இருந்து சுமார் 7 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள உமரிரி கிராமத்துக்குள் நுழைந்த தற்கொலைப் படை தீவிரவாதிகள் மூன்று பேரும் தங்களது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்ததில், அந்த கிராமத்தைச் சேர்ந்த இரு குழந்தைகள், ஒரு பெண் உட்பட நான்கு பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (இ-12)

# ஜெனிவா அமர்வில் இன்று

# இலங்கைக்கு அவகாசம் வழங்கக்கோரும் தீர்மானத்தை இந்தியா எதிர்க்க வேண்டும்

## அ.தி.மு.க. ஓ.பி.எஸ். அணி பாராளுமன்றில் வலியுறுத்து

(டில்லி)

போர்க்குற்ற விசாரணை தொடர்பாக இலங்கைக்கு அவகாசம் வழங்குவதற்கான தீர்மானத்தை இந்தியா எதிர்க்க வேண்டும் என இந்திய பாராளுமன்றத்தில் அ.தி.மு.க.எம்.பி.மைத்திரேயன் வலியுறுத்தினார்.



இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை அளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் 2 ஆண்டு அவகாசம் கேட்டுள்ளது.

இதற்கு அனுமதி அளிக்கும் வகையில், ஜெனிவாவில் இன்று 22ஆம் திகதி நடைபெற உள்ள ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட உள்ளது. இலங்கைக்கு ஆதரவான இந்த தீர்மானத்தை இந்தியா எதிர்க்க வேண்டும் என தமிழக தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இந்திய பாராளுமன்றத்தில் இப்பிரச்சினை எதிரொலித்தது. மாநிலங்களவையில் இப் பிரச்சினையை அ.தி.மு.க.எம்.பி. மைத்திரேயன் எழுப்பினார்.

அவர் பேசும்போது, 'இலங்கையில் திட்டமிட்டு நடத்தப்பட்ட இனப்படுகொலையில் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால், இதுவரை அங்கு நம்பகமான விசாரணை நடத்தப்படவில்லை. தவறு செய்த ஒரு நபர்கூட தண்டிக்கப்படவில்லை.

இலங்கைக்கு மேலும் 2 ஆண்டு அவகாசம் அளிக்கும் தீர்மானம் மீது இன்று 22ஆம் திகதி ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சில நாடுகள் கொண்டு வந்துள்ள இந்த தீர்மானம் தமிழர்களுக்கு அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

நாட்டின் மிகவும் சக்தி வாய்ந்த தலைவராக பிரதமர் மோடி விளங்குகிறார். உண்மையில், அவர் உலகின் மிகவும் சக்தி வாய்ந்த தலைவரும் ஆவார். மோடியால் கூட தமிழர்களுக்கு நீதி வழங்க முடியாது என்றால், வேறு யாராலும் வழங்க முடியாது. எனவே, மார்ச் 22ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் கொண்டு வரப்படும் தீர்மானத்திற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். (இ-12)

# இனவாதப் பிரச்சினைகளே சமூகப் பிரச்சினைகள் தோற்றம் பெற காரணம்

## தலாய்லாமா கருத்து



(டில்லி)

உலகம்முழுவதும்உள்ள மக்கள் தற்போது இனவாத பிரச்சின்னைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் சமூக பிரச்சினைகள் ஏற்படுவதற்கு இனவாத பிரச்சினைகளே காரணம் எனவும் திபெத்திய பௌத்த மத தலைவர் தலாய்லாமா தெரிவித்துள்ளார்.

'நர்மதை நதிப் பாதுகாப்பு' விழிப்புணர்வு பயணத்தில் கலந்து கொள்வதற்காக மத்திய பிரதேசம் சென்றுள்ள அவர் ஊடகவியலாளர்களை சந்தித்த போது இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்தியா விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு. இந்தியாவில் உள்ள கிராமப்புற பகுதிகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

கிராமப்புற பகுதிகளில் கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை முன்னெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும். கிராமம் முன்னேற்றம் அடைந்தால் மாத்திரமே நாடு முன்னேற்றம் அடையும்.

இந்திய பெண்கள் மிகவும் உணர்வுபூர்வமானவர்கள், இரக்க குணம் கொண்டவர்கள். எனவே அவர்களுக்கு பல்வேறு துறைகளில் ஈடுபட வாய்ப்பளித்தால் இந்தியா மேலும் முன்னேற்றம் காணும்.

உலக சுற்றுச்சூழல் மாறிக்கொண்டு வருகின்றது. இதன் காரணமாக நாமும் அந்த சுற்றுச்சூழலுக்கு ஏற்றாற்போல் எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். அதேபோன்று இன அடிப்படையில் பாகுபாடு, கொடுமைகள் ஆகியவற்றுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (இ-12)

# கானாவில் அருவியில் குளித்த இருபது மாணவர்கள் மரணம்

## மரம் விழுந்ததால் பாரிய அனர்த்தம்

கானா நாட்டில் அருவியில் குளித்த 20 மாணவர்கள் பலத்த காயம் அடைந்து நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 25 இற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகளும் மாணவர்களும் படுகாயமடைந்தனர்.



ஆபிரிக்க நாடான கானாவில் பிராங் அகாபோ பகுதியில் கின்டாம்போ என்னும் பிரபல அருவி உள்ளது. இந்த அருவியில் குளிப்பதற்காக அப்பகுதியில் உள்ள வென்சி சீனியர் என்ற பாடசாலையிலிருந்து 50இற்கும் மேற்பட்ட மாணவர்கள் வந்தனர். அவர்கள் சுற்றுலா பயணிகளுடன் அருவியின் கீழ் பகுதியில் உற்சாகமாக நீந்திக் குளித்துக்கொண்டு இருந்தனர்.

அப்போது திடீரென பலத்த மழையுடன் பயங்கர சூறாவளிக்காற்று வீசியது. இதில் ஒரு பெரிய மரம் வேரோடு சாய்ந்து அருவியில் குளித்துக் கொண்டிருந்தவர்கள் மீது விழுந்தது. இதில் 20 மாணவர்கள் பலத்த காயமடைந்து நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 25இற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகளும், மாணவர்களும் படுகாயம் அடைந்தனர். சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்த பொலிஸாரும் மீட்புக் குழுவினரும், காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். சுற்றுலா சென்ற இடத்தில் மாணவர்கள் பலியான சம்பவம் கானாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-12)

# அமெரிக்காவுடனான போருக்கு நாம் தயார்

## வடகொரியா அறிவிப்பு



அமெரிக்காவுடனான எந்த வகையான போரையும் எதிர்கொள்வதற்கான போதிய செயற்றிறனுடன் வடகொரியா திகழ்வதாக வடகொரிய வெளியுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

தென்கொரியா மற்றும் அமெரிக்க படைகளை அச்சுறுத்தும் வகையில் வடகொரியா தொடர்ந்து செயற்படுமாயின், அதற்கு தகுந்த பதிலடி கொடுக்க இராணுவம் தயார் நிலையில் இருப்பதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் ரெக்ஸ் டில்லர்சன் அண்மையில் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அமெரிக்காவின் குறித்த எச்சரிக்கைக்கு கண்டனத்தை வெளியிட்ட வடகொரியா, அமெரிக்காவுடன்னான போருக்கு தயாராக இருப்பதாக நேற்று வடகொரியா அறிவித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்க இராஜாங்க செயலாளராக ஆசியாவிற்கான தனது முதல் விஜயமாக ஜப்பான் சென்றுள்ள டில்லர்சன், வடகொரியாவிற்கு எதிரான புதிய அணுகுமுறைகளை கையாள்வது தொடர்பில் தென்கொரியா மற்றும் சீனாவுடன் கலந்துரையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

# மீனவர் படுகொலை விசாரணைக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கவில்லை

## இலங்கைக் கடற்படை குற்றச்சாட்டு



(கொழும்பு)

கச்சதீவு அருகே தமிழ் நாட்டு மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கவில்லை என்று இலங்கை கடற்படைப் பேச்சாளர் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த மார்ச் 6ஆம் திகதி, கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழ் நாட்டு மீனவர் ஒருவர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

எனினும் இலங்கை கடற்படை இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளதுடன், இது குறித்து முழு அளவிலான விசாரணையை நடத்துவதாக உறுதியளித்திருந்தது.

இரண்டு வாரங்களுக்குள் இந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று இலங்கை கடற்படைக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் லெப். கொமாண்டர் சமிந்த வலகுலுகே, விசாரணைக்குத் தேவையான புவிநிலைகாட்டி தொழிலநுட்பத் தரவுகளை (ஜிபிஎஸ்) வழங்குமாறு இந்தியாவிடம் கோரப்பட்டது. எனினும் இந்தியா இந்த தரவு களையும் இதுவரையில் இலங்கை கடற்படைக்கு வழங்கவில்லை. இதனால் விசாரணை அறிக்கையை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த தகவல்களுக்காக காத்திராமல் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட விசாரணை அறிக்கை இந்த வாரத்தில் கையளிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கைப் படைகளை பலப்படுத்த சீனா நிபந்தனையற்ற ஆதரவு

(கொழும்பு)

இலங்கையின் ஆயுதப் படைகளை மேலும் பலப்படுத்துவதற்கு தமது நாடு நிபந்தனையற்ற, முழுமையான ஆதரவை வழங்கும் என்று சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் சாங் வான்குவான் உறுதியளித்துள்ளார்.

சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் சாங் வான்குவான் நேற்று முன்தினம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

ஆயுதப் படைகளுக்கு தொடர்ந்தும் இராணுவத் தளபாடங்களையும் பயிற்சிகளையும் தொழில்நுட்ப அறிவையும் சீனா வழங்கும் என்றும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்தார்.



அதேவேளை, இலங்கையின் அபிவிருத்திக்கும் ஆயுதப்படைகளின் அபிவிருத்திக்கும் சீனா தொடர்ந்து வழங்கி வரும் உதவிக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன இந்தச் சந்திப்பின் போது. நன்றியைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# நுகர்வோர் சட்டங்களை மீறும் வர்த்தகர்கள் கைது செய்யப்படுவர்

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் சட்டங்களை மீறும் வர்த்தகர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றி வளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

மாவட்ட ரீதியில் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அதிகார சபையின் தலைவர் ஹஷித திலகரட்ன தெரிவித்தார்.

தரமற்ற பொருட்களை விநியோகிக்கும் மற்றும் களஞ்சியப்படுத்தும் இடங்களை சுற்றி வளைப்பதற்கான விசேட செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (இ-7)

# தேசிய விருது விழா ஜனாதிபதி தலைமையில்



தாய்நாட்டுக்காக உன்னதமான பணியில் ஈடுபட்ட, உன்னதமான இலங்கையர்களுக்கு தேசிய விருது வழங்கப்படும் "தேசிய விருது விழா 2017" ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

12 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறும் இந்த தேசிய விருது வழங்கும் விழாவில் இலங்கைக்காக சிறப்பாக சேவையாற்றியுள்ள 89 இலங்கை பிரஜைகளுக்கு ஜனாதிபதியினால் விருதுகள் வழங்கப்பட்டன.

இலங்கையருக்கு வழங்கப்படும் அதியுயர் விருதான ஸ்ரீலங்காபிமான்ய விருது காலஞ்சென்ற பண்டித் டபிள்யூ. டீ. அமரதேவவுக்கு வழங்கப் பட்டது. விசேடமாக இலங்கைக்கும், பொதுவாக மனித குலத்துக்கும் ஆற்றிய உன்னத மற்றும் சிறப்பான சேவைக்காக இலங்கையர்கள் அல்லாத நபர்களுக்கு வழங்கப்படும் தேசிய விருதான இலங்கை ரஞ்சன விருது, கலாநிதி சரத்டி குணபால, சித்தார்த்தகாவுல் ஆகியோருக்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது. (இ-7)



## இன்று ஒரு தகவல்

### சொல்லித் தொலைக்காதவர்கள்

என் சம்பந்தப்பட்ட எவரையேனும் நான் ஒரு வேலையாக அனுப்பியிருந்தால் அவர்கள் வந்ததும் அவர்களைப் பார்த்தீர்களா? என்ன சொன்னார்கள்? நீங்கள் கேட்ட பிறகு சொன்னார்களா? வேறு என்னவெல்லாம் சொன்னார்கள்? ஆக இதைத் தவிர வேறு ஒன்றும் சொல்லவில்லை அப்படித்தானே? சொன்ன போது அவர்களுடைய முகப் போக்கு எப்படி இருந்தது? கூட யார் இருந்தார்கள்? என்று ஏகப்பட்ட கேள்விகளைத் துளைத்து எடுத்து விடுவேன்.

நானே சென்றிருந்தால் என்னென்ன செய்திகளையெல்லாம் திரட்டியிருப்பேனோ, அவை அத்தனையையும் அவர்களிடமிருந்து பிடுங்காமல் விடமாட்டேன்.

இதற்குக் காரணம் இருக்கிறது. போய் வரும் நபர்கள் பெரும்பாலும் நடந்த எதையும் விரிவாகச் சொல்வதில்லை என்ற கொள்கையே வைத்திருக்கிறார்கள்.

முதலில் போனேன், உங்க லெட்டரைக் கொடுத்தேன். சரின்னு சொல்லி வாங்கி வைச்சிட்டாரு என்று மட்டும் சொல்லிவிட்டு நகர்ந்து விடுவார்கள். பல விடயங்களை இவர்கள் எந்தவிதக் காரணமும் உள்நோக்கமும் இல்லாமலேயே மறைத்து விடுகிறார்கள்.

கிண்டக் கிண்டத் தான் தவணை தவணையாக நடந்தவற்றைச் சொல்வார்கள்.

மகன் வேலை வாய்ப்பு விடயமாய் போய் விட்டு வெறுங்கையுடன் திரும்பியிருப்பான். அப்பா கேட்டால் வேலை கிடைக்கலைப்பா என்பான் சுருக்கமாய். மேலும் மேலும் கேட்க கேட்கத் தான் நடந்த விபரங்களே வெளியே வர ஆரம்பிக்கும்.

ரயிலுக்கு ரிக்கெட் எடுக்கப் போய் திரும்பி விட்டு டிக்கெட் கிடைத்ததா? இல்லையா? என்று கூடச் சொல்லாமல் போய்ப் படுத்து விடுவார்கள் சிலபேர். இப்படி பலரும் பல விடயங்களை தங்களோடு பூட்டிப் புதைத்துக் கொள்கிறார்கள்.

நம்மைப் பற்றிய விடயங்களை மறைக்கவோ அடக்கி வாசிக்கவோ எமக்கு உரிமை இருக்கிறது. ஆனால் மற்றவர்களுக்கு அவசியம் தெரியவேண்டிய விடயங்களை மிகத் துல்லியமாக ஒன்று விடாமல் சொல்வது தான் முறை:

....ரா அதல்லாம் புரியச் சொல்லிவிடுவாரே? என்று பாராட்டுப் பெறவேண்டியது முக்கியம்

இன்னும் சிலபேர் இருக்கிறார்கள், இவர்கள் தங்களுக்கு வேண்டியதைச் சொல்லி காரியத்தை முடித்துக் கொள்ள மாட்டார்கள். ஊமைக் கோட்டான்களாகவே வாழ்வார்கள். இவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று மற்றவர்கள் ஊகித்துக் கண்டுபிடித்து அனுமானித்து இவர்களுக்கு வேண்டியவற்றை செய்து கொடுக்க வேண்டும்.

இவர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள மணிக்கணக்கில் ஆகும். அவர்கள் வாய் திறந்து சொன்னால் முத்தா கொட்டிப் போகும்? நல்ல கூத்து எல்லோருமே நம் கோணத்தில் அதுவும் சுயநலமான போக்கில் சிந்தித்து நமக்கு உதவுவார்கள்- என்று இவர்கள் எப்படித்தான் எதிர்பார்க்கிறார்களோ தெரியவில்லை.

உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ளும் விடயத்தில் வீணான தடைச் சுவர்கள் ஏன்?

நாமே கட்டும் இந்தச் சுவர்கள் நம் வளர்ச்சியைத் தடை செய்பவை என்பதை உடையவர்கள் உணரட்டும்!

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 2

*( 2017-03-17 வெள்ளிக்கிழமை வெளியான வினாக்களின் தொடர்ச்சி)*

11) 4 மனிதர்கள் 2 நாட்களில் செய்து முடிக்கும் வேலையை 8 மனிதர்கள் எத்தனை மணித்தியாலங்களில் செய்து முடிப்பர்? ........................................

12) 4 சவர்க்காரக்கட்டிகளின் நிறை 160g எனின் 1 டசின் சவர்க்காரக் கட்டிகளின் நிறை யாது? ........................................................................

13)




♦ வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை ஒன்றில் ஒவ்வொரு வருடமும் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையை மேலுள்ள வரைபடம் காட்டுகின்றது.

♦ அப்பாடசாலையில் இவ்வருடம் சித்தியடைவார்கள் என எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..............................................

14) ஒரேமாதிரியான 04 கம்பத்துண்டங்களைப் பொருத்துவதற்கு ரூபா 51.00 செலவாகின்றது எனின், அவ்வாறான இரண்டு கம்பத்துண்டங்களைப் பொருத்துவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?.,.............................................

15) ஒரு வேலையைச் செய்து முடிக்க 2 வாரங்களும் 2 நாட்களும் எடுத்தன. இன்னொரு வேலையைச் செய்து முடிக்க 1 வாரமும் 2 நாட்களும் எடுத்தன எனின், இரண்டு வேலைகளையும் செய்து முடித்த காலத்தை நாட்களில் எழுதுக.....................

16 தொடக்கம் 45 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து அதன்கீழ்க கோடிடுக.

16) இவ் வருட ஒலிம்பிக் போட்டி நடத்தத் திட்டமிட்டுள்ள நாடு.
1. அமெரிக்கா 2. பிறேசில் 3. ஜப்பான் 4. இந்தியா

17) நீரில் வாழ்க்கையை ஆரம்பிக்கும் பிராணிகளின் கூட்டம்.
1. தவளை, தேரை, நுளம்பு 2. முதலை, தவளை, பாம்பு
3. நுளம்பு, ஆமை, உடும்பு 4. ஆமை, முதலை, தவளை

18) இரவு வேளைகளில் ஒலி எழுப்பும் பிராணி
1. ஆமை 2. கிளி 3. ஆந்தை 4. வாத்து

19) நவலங்கா சமயப் பாடசாலையை ஆரம்பித்தவர்
1. ரீ.பி.ஜாயா 2. வண.எஸ்.மஹிந்த 3. ஜயதிலக்க 4. C.W.W.கன்னங்கரா

20)



அருகேயுள்ள சூரிய நமஸ்காரம் எத்தனையாவது படிநிலையாகும்?
1) 3ம் படிநிலை 2) 6ம் படிநிலை
3) 9ம் படிநிலை 4) 5ம் படிநிலை

21.




இக் குறியீடு குறிப்பது
1. பேருந்துத் தரிப்பிடம் 2. வாகனம் நிறுத்துமிடம்
3. நிறுத்துக 4. பாரவூர்தி நிறுத்துமிடம்

22) பலகையொன்றை மட்டமாகச் சீவுவதற்குப் பொருத்தமான உபகரணம்.
1. வாள் 2. உளி 3. சீவுளி 4. துறப்பணம்

23) உடல் வளர்ச்சிக்குப் பயன்படாத உணவு
1. இறைச்சி 2. கத்தரி 3. பால் 4. முட்டை

24) அண்மைக்காலத்தில் களனி கங்கையின் பெருக்கெடுப்பால் அதிகம் பாதிக்கப்பட்ட மாகாணம் எது?
1. வடக்கு மாகாணம் 2. மேல் மாகாணம் 3. வடமத்திய மாகாணம் 4. கிழக்கு மாகாணம்

25) இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையிலுள்ள இலக்கங்களின் எண்ணிக்கை.
1) 11 2) 10 3) 12 4) 15

26) எல்லே விளையாட்டின் ஓர் அணியில் விளையாடும் வீரர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை.
1) 10 2) 16 3) 07 4) 12

27. "சிலோன் நஷனல் ரிவீவ்" (Ceylon National Review) எனும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர்
1. ஆனந்த சமரக்கோன் 2. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
3. வண.எஸ்.மஹிந்த 4. சேர்.டீ.பி.ஜயதிலக்க

28) கலாவாவியைக் கட்டுவித்த அரசன்
1. தாதுசேனன் 2. மகாசேனன் 3. பண்டுகாபயன் 4. பராக்கிரமபாகு

29) "ஏலந்தண்டு ராமநாதா ............ எவ்வகைப் பாடலாகும்?
1. அரிவி வெட்டும் பாடல் 2. தோணிப் பாடல் 3. மலையகப் பாடல் 4. கும்மிப் பாடல்

30)



இவ்வுபகரணம் எதனுடைய மாதிரி?
1. ஒளிச்சமிக்ஞை 2. மின்மானி
3. மின்சூள் 4. மின்காந்தம்

31) பழைய கற்பாலம் அமைந்துள்ள மாவட்டம்
1. அநுராதபுரம் 2. பொலநறுவை 3. கண்டி 4. காலி

32) கத்தியொன்றைப் பரிமாறும் போது கொடுப்பவர் பிடிக்க வேண்டிய கத்தியின் பகுதி
1. முனைப்பகுதி 2. பிடிப்பகுதி 3. அடிப்பகுதி 4. நடுப்பகுதி

33) எமக்கு இலவச சேவையைத் தருகின்ற நிறுவனங்களில் ஒன்று.
1. வைத்தியசாலை 2. சதொச 3. ஒசுசல 4. மின்சார சபை

34)



இக் குறியீடு உணர்த்தும் கருத்து.
1. மேலே பார்க்கவும் 2. நேராகச் செல்லவும்
3. இப்பக்கம் மேலே 4. கீழிருந்து மேல்

35) தொலைபேசிக் கட்டணத்தைச் செலுத்த முடியாத இடம்.
1. மக்கள் வங்கிக்கிளை 2. தபால் நிலையம்
3. சிறிலங்கா டெலிகொம் 4. பிரதேச சபை

36. பின்வரும் விளையாட்டுக்களில் கிராமிய விளையாட்டு எது?
1. கரப்பந்தாட்டம் 2. வலைப்பந்து 3. பல்லாங்குழி 4. உதைபந்து

37. முதன் முதல் அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னன்.
1. வசபன் 2. பண்டுகாபயன் 3. தேவநம்பியதீசன் 4. துட்டகைமுனு

38) திஸ்ஸ வாவியைக் கட்டுவித்த அரசன்
1. தேவநம்பியதீசன் 2. மகாசேனன் 3. பராக்கிரமபாகு 4. எல்லாளன்

39) ஜின் கங்கை கடலுடன் கலக்கும் நகரம் எது?
1. திருகோணமலை 2. மட்டக்களப்பு 3. கதிர்காமம் 4. காலி

40)



உருவில் காணப்படும் உடுத்தொகுதியின் பெயர்
1. கார்த்திகை 2. வேட்டைக்காரன்
3. ஓராயன் 4. தேள்

41) கொல்லன் கம்மாலையில் நெருப்பை எரியச் செய்வதற்குப் பயன்படும் காற்றைப் பெற உதவும் பொருள்.
1. சுத்தியல் 2. பட்டறைக்கல் 3. துருத்தி 4. சாவணம்

42) வேரின் மூலம் தன் இனத்தைப் பெருக்கும் தாவரம்
1. கத்தரி 2. தென்னை 3. கறிவேப்பிலை 4. முருங்கை

43) "வுளூ" சடங்குடன் தொடர்புடைய இனத்தவர்
1. முஸ்லிம்கள் 2. பறங்கியர் 3. தமிழர் 4. சிங்களவர்

44) எமது உடலில் உள்ள நீர் வெளியேறும் சந்தர்ப்பம்.
1. உட்சுவாசம் 2. வெளிச்சுவாசம் 3. உறங்கும்போது 4. எழுதும்போது

45) தேசியக்கொடியின் பச்சைநிறக் கீலம் குறிப்பது.
1. தமிழர் 2. முஸ்லிம் 3. பறங்கியர் 4. சிங்களவர்

## 2017-03-17 வெள்ளியன்று வெளியான பகுதி-1 இன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) 1 | 11) 2 | 21) 1 | 31) 2 |
| 2) 3 | 12) 3 | 22) 2 | 32) 3 |
| 3) 2 | 13) 1 | 23) 3 | 33) 1 |
| 4) 3 | 14) 2 | 24) 3 | 34) 2 |
| 5) 2 | 15) 3 | 25) 3 | 35) 3 |
| 6) 1 | 16) 2 | 26) 2 | 36) 2 |
| 7) 2 | 17) 1 | 27) 1 | 37) 2 |
| 8) 1 | 18) 3 | 28) 1 | 38) 3 |
| 9) 2 | 19) 3 | 29) 2 | 39) அன்னாசி |
| 10) 3 | 20) 1 | 30) 3 | 40) ஆனைக்கும் அடிசறுக்கும |

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 1

1 ஆம் 2 ஆம் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) 1) கோழியால் நடக்கவும் அதேவேளை பறக்கவும் முடியும்.
2) நாயால் குரைக்கவும் அதேவேளை கடிக்கவும் முடியும்.
3) மீனால் நீந்தவும் அதேவேளை நடக்கவும் முடியும்.

(2) 1) குளத்து நீர் நிலையாக நிற்கும் குடிக்கக்கூடியது.
2) கடல் நீர் ஓடும் குடிக்கக்கூடியது.
3) ஆற்று நீர் ஓடும் குடிக்கக்கூடியது.

♦ ஐந்து மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தந்த நேரங்களை பின்வரும் கடிகாரங்கள் காட்டுகின்றன.



சந்திரன் இந்திரன் கமலா விமலா அகமட்

(3) முதலில் பாடசாலைக்கு வந்தவர் யார்?
1) சந்திரன் 2) இந்திரன் 3) அகமட் 4) விமலா

(4) பாடசாலை ஆரம்பிப்பது காலை 7.15 ஆகும். அன்றைய தினம் பிந்தி வந்தவர் யார்?
1) கமலா 2) இந்திரன் 3) அகமட் 4) விமலா

♦ பின்வரும் தகவல்களைக் கொண்டு 5, 6 ஆம் வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| 1 தீப்பெட்டி<br>1 மெழுகுவர்த்தி | 2 தீப்பெட்டி<br>3 மெழுகுவர்த்தி |
|---|---|
| விலை ருபா 9.00 | விலை ருபா 23.50 |

(5) தீப்பெட்டி ஒன்றின் விலை யாது?
1) ரூபா 2.50 2) ரூபா 3.50 3) ரூபா 5.50 4) ரூபா 4.50

(6) மெழுகுவர்த்தி ஒன்றின் விலை யாது?
1) ரூபா 2.50 2) ரூபா 3.50 3) ரூபா 5.50 4) ரூபா 4.50

(7) கீழே தரப்பட்டுள்ள எண் கணிப்புக் கோலத்தை அவதானித்து வெற்றிடங்களுக்கு பொருத்தமான எண் சோடிகளைத் தெரிவு செய்க.




1) 1,2 2) 1,1 3) 2,4 4) 3,2

(8) நகர்ப்புற பாடசாலைகளுக்கு முன்னுள்ள வீதியைக் கடப்பதற்கு பயன்படுத்த தவறான கடவை எது?
1) மஞ்சட்கோட்டுக் கடவை 2) மேம்பாலம் 3) சுரங்கப்பாதை 4) குறுக்கு வழி

(9) அடைப்புக்குள் உள்ள இலக்கங்களில் அதிக தடவைகள் உள்ள எண்ணால் குறைந்த தடவைகள் உள்ள எண்ணைப் பெருக்கினால் கிடைக்கும் விடை யாது?

6, 7, 2, 4, 3, 5, 9, 2, 3, 8, 8,
2, 7, 9, 2, 9, 6, 3, 6, 5

1) 9 2) 12 3) 8 4) 18

(10) ஒரு சிறுவன் தனக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தவர் தனக்கு என்ன உறவுமுறை என்பதைக் கூறாது ஒரு புதிரைக் கூறினான். அப்புதிரை விடுவித்து அவர் என்ன உறவு முறை எனக் கண்டு பிடியுங்கள்.

எனக்கு பக்கத்தில் நிற்பவர் எனது தந்தையின் மனைவியின் தம்பியின் மகள் ஆவார்.

1) சகோதரன் 2) சகோதரி 3) மைத்துனன் 4) மைத்துனி

அடைப்பில் உள்ள சொற்களிலிருந்து விடுகதைகளுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

(முட்டை, யானை, சுடுநீர், இளநீர், குதிரை, மீன், உப்பு, சீனி, ஒட்டகம்)

(11) கடல் நீரில் வளர்வான் ஆனால் மழை நீரில் அழிவான். அவன் யார்?
..................................................

(12) கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டுவீடு, ஓட்டு வீட்டை உடைத்தால் வெள்ளை மாளிகை, வெள்ளை மாளிகைக்குள் குளத்து நீர் அது என்ன?
..................................................

(13) தண்ணியில்லாக் காட்டிலே அலைந்து திரிவாள் அழகி, முதுகிலே பாரத்தையும் முணங்காமல் சுமப்பாள் அவள் யார்?
..................................................

கீழுள்ள வாக்கியங்களில் கோடிட்ட சொற்களின் கருத்தைத் தெரிவு செய்க.

(14) சிறுவர்கள் மூதாதையரின் அறிவுரைகளைக் கேட்பது நல்லது ஆகும்.
1) முன்னோர் 2) பெற்றோர் 3) சான்றோர் 4) நல்லவர்

(15) கதிரவன் எவ்வேளையும் கந்தல் ஆடையே அணிந்து இருப்பான்.
1) அழகான 2) கவர்ச்சியான 3) பெரிய 4) கிழிந்த

(16) எனது அக்காவின் அகவை இருபது ஆகும்.
1) நிறை 2) நிறம் 3) வயது 4) தரம்

(17) சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக. தீக்குச்சிகளைப் பயன்படுத்தி உரோமன் இலக்கங்கள் அமைத்த ஒரு சிறுவனுக்கு 30ஐ அமைத்திட 6 தீக்குச்சிகள் தேவைப்பட்டன. அவன் 28 ஐ அமைத்திட எத்தனை தீக்குச்சிகள் தேவை?

(18) ஓடும் உதிரத்தில் வடிந்து ஒழுகும் கண்ணீரில் தேடிப்பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ எனும் கவியில் உதிரம் என்பதன் கருத்து யாது?
..................................................

(19) மழை பெய்ய ஆரம்பித்தவுடன் அக்கா ஓட்டமும் நடையுமாக வீடு சென்று அடைந்தாள். இங்கு ஓட்டமும் நடையும் என்பது குறிக்கும் மிகப் பொருத்தமான கருத்து யாது?
..................................................

(20) தரப்பட்டுள்ள உருவங்களுள் மூன்று ஏதோவொரு விதத்தில் ஒற்றுமையானவை. ஒன்று விதியாசமானது. அதன் கீழ்க் கீறிடுக.



1) 2) 3) 4)

(21) என்னிடம் உள்ள பேனாக்களில் இரண்டைத்தவிர எஞ்சியவை கறுப்பு நிறம், இரண்டைத்தவிர எஞ்சியவை நீலநிறம், இரண்டைத்தவிர எஞ்சியவை சிவப்பு நிறம். எனவே என்னிடம்உள்ள பேனாக்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை யாது?..................................

## 2017-03-17 , 2017-03-22 திகதிகளில் வெளியான பகுதி-2 இன் விடைகள்

01. (i) தவளை (ii) தண்மை + நீர் (iii) தவளை /பூச்சி / நாக்கு / நதி / பாம்பு / அது (iv) அழிவை (v) ஒடி கதஹ்தி பேசி (vi) நதி
02. (i) மழை (ii)அறம் (iii) ஆளுநர்
03. (i) விசிறியும் சுழியும், சங்கிலிக்கொம்பும் (ii) இரட்டைக் கொம்பும் அரவும்
04. (i) திரண்டால் மிடுக்கு (ii) இளமையிற் கல்வி
05. (ii) பின்பற்றுதல் (ii) விழித்தல் / நித்திரை விட்டெழுதல்
06. (i) மூலபலம் அற்றது (ii) ஒற்றுமை
07. (i) மாணிக்க கங்கை அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது.
(ii) உறுதியும் உழைப்பும் உள்ளவனுக்கு வெற்றி திண்ணம் என்பது பாஸ்ட்டரின் கொள்கையாகும்.
08. (i) சகபாடி (ii) ஆச்சிரமம் / ஆசிரமம்
09. (i) வயலில் முட்கள் இருந்தன. / வயல்களில் முட்கள் இருந்தன.
10. (i) உன்னாற் (ல்) கட்ட முடியுமா? (ii) உடன் பிறந்தவர்போல்
11. அ) (i) Knife (ii) Eyes
(iii) Can you help me?
12. அ) (i) பத் (ii) பஹலொவ
ஆ) (i) பஸ் வண்டி ஒன்று வந்துவிட்டது.
13. பொருத்தமான வாக்கியங்கள)
14. 1) பதினாறாயிரத்து எழுபது
2) 221 3) ix
4) (i) 8005 (ii) 2500
5) 4 6) $\frac{11}{15}$ (ii) 1.3
7) i) 17 : 00 h / 17 : 00 ii) பி.ப 3.15
8) 12 cm
9) 3 தடவை
10) ரூபா 52 : 50
11) 24 மணித்தியாலயங்கள்
12) 480g
13) 85 மாணவர்கள்
14) ரூபா 17 : 00
15) 25 நாட்கள்
16) பிறேசில்
17) தவளை, தேரை, நுளம்பு
18) ஆந்தை
19) வண.எஸ்.மஹிந்த
20) 9ம் படிநிலை
21) வாகனம் நிறுத்துமிடம்
22) சீவுளி
23) கத்தரி
24) மேல் மாகாணம்
25) 12 26. 12
27) கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி
28) தாதுசேனன்
29) தோணிப்பாடல்
30) ஒளிச்சமிக்ஞை
31) அநுராதபுரம்
32) முனைப்பகுதி
33) வைத்தியசாலை
34) இப்பக்கம் மேலே
35) பிரதேச சபை
36) பல்லாங்குழி
37) பண்டுகாபயன்
38) தேவநம்பியதீசன்
39) காலி
40) கார்த்திகை
41) துருத்தி
42) கறிவேப்பிலை
43) முஸ்லீம்
44) வெளிச்சுவாசம்
45) முஸ்லிம்






உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ்.பிராந்திய பணிமனையின் ஏற்பாட்டில் நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை எனும் தொனிப்பொருளில் வருமான வரி செலுத்துநர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் யாழ்.கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள செல்வமஹால் மண்டபத்தில் நடைபெற்றது. உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ்.பிராந்திய ஆணையாளர் பந்துல ஹப்புதந்திரிகே தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் பிரதம விருந்தினராக உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் திருமதி கல்யாணி தஹநாயக்க கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் வருமான வரி செலுத்துநர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:பொ.சோபிகா)

# 'மீண்டும் பேச்சு நடத்துவோம்'

(கொழும்பு)

தொழில்நுட்ப மற்றும் மருத்துவ தெற்காசிய நிறுவனத்தின் (SAITM) பிரச்சினைக்கு, தாமதமின்றி முடிவொன்றைப் எடுப்பதற்கு, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்காக, உரிய தரப்பினருடன், மற்றுமொரு பேச்சுவார்த்தை சுற்றில் ஈடுபடவுள்ளதாக, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்ந்து நீடிக்குமாயின், தொழிற்சங்க நடவடிக்கைகளை நடத்துவதற்கு, கட்டாயப்படுத்துவோம் என்றும் குறித்த சங்கம் கூறியுள்ளது.

இதற்காக, அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தனியார் பயிற்சிகளை இரத்து செய்வதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் ஹரித அலுத்கம தெரிவித்துள்ளார்.

"தொழில்நுட்ப மற்றும் மருத்துவ தெற்காசிய நிறுவனத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும், எமது போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும், பல்கலைக்கழக பீடாதிபதிகள், பேராசிரியர்கள், மாணவர்கள், அரசாங்க கட்சிகள் போன்ற அனைவருடனும் நாம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மருத்துவ சங்கத்தின் அதிகாரியொருவர் மீது, சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு, உதவிச் செயலாளர் கண்டனம் வெளியிட்டார். இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி, தவறிழைத்தோருக்கு தண்டனை வழங்கப்படல் வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1020

Search for people, places and things Nagendram Home

**அருண்**




**மதி**




**பியா**




**குணா**




**வித்தகா**




**கயூ**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நீர் வளம் காப்போம்



உதயராசா கவிநிலவன்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி , தரம் 10F



உதயராசா பிரணவிகா
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
தரம் 6 D

சூழலிலிருந்து எமக்கு கிடைக்கும் அரிய பயனுள்ள வளங்களுள் நீரானது முக்கிய இடத்தை வகிக்கின்றது. கோடைகாலம் ஆரம்பிக்கும் போதே தண்ணீர் வரட்சியும் ஆரம்பித்து விட்டுள்ள நிலையில் இன்று உலக நீர்தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

"நீர் இன்றி அமையாது உலகு" என்ற வள்ளுவரின் கூற்றுக்கேற்ப நீரின்றி நாம் வாழ முடியாது. பூமியில் ஏறத்தாழ 30 வீதம் மட்டுமே நிலப்பரப்பாகும். மிகுதி ஏறத்தாழ 70 வீதமும் நீர்ப்பரப்பாகும். இதில் 0.01 வீதமான அளவு நீர் மட்டுமே பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. இன்று அந்த முப்பது வீத நிலத்தில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான நீரை அளிக்கும் போதிய வசதியை பூமி இழந்து வருகின்றது.

அதற்கு மனித இனம் தான் காரணம் என்பது தெரிந்த விடயமே.

நீரானது அருவி, கிணறு, ஆறு, குளம், பொய்கை, தடாகம், நீர்வீழ்ச்சி, கடல், சமுத்திரம் என பரம்பியுள்ளது. அவற்றில் காணப்படுவது திரவ நிலையில் உள்ள நீராகும். நீரானது எப்போதும், எங்கும் திரவ நிலையில் காணப்படமாட்டாது. நீரானது அதன் பௌதீக நிலைக்கேற்ப திண்மம், திரவம், வாயு என்ற நிலையில் காணப்படுகின்றது.

நீரின் திண்ம நிலைக்கு உதாரணங்களாக பனிக்கட்டி, பனியாறு என்பவற்றைக் குறிப்பிடலாம். துருவப் பகுதியை அண்டிய பிரதேசங்களில் நீரானது மெல்ல நகரும் பனிக்கட்டிப் பாறைகளாகக் காணப்படுகின்றது.

இயற்கையில் நீரானது படிவுவீழ்ச்சி (Precipipitation), மேற்பரப்பு நீர் (Surface water), தரைக் கீழ் நீர் (Ground water) எனும் மூன்று மூலங்களில் இருந்து பெறப்படுகின்றது. நீரில் கரைந்துள்ள உப்புக்களின் அடிப்படையில் நன்னீர் (Fresh water), சவர் நீர் (Brackish water), உவர் நீர் (Sea water) என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

இத்தகைய நீரானது மனிதனுக்கு பல்வேறு வழிகளில் பயன்படுகின்றது. குறிப்பாக பருகுவதற்கு, பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு, குளிப்பதற்கு, ஆடைகள் கழுவதற்கு, கட்றபோக்குவரத்திற்கு, நீர் மின்சார உற்பத்திக்கு, மென்பானங்களை உற்பத்தி செய்வதற்கு, பொழுது போக்கு நடவடிக்கைகளுக்கு என பல்வேறு வழிகளில் நீர் பயன்படுகின்றது. உயிரங்கிகளின் நிலவுகைக்கு நீரின் முக்கியத்துவங்கள் சில பின்வருமாறு,

கழிவகற்றும் ஊடகமாக, அங்கிகள் வாழும் ஊடகமாக, தாவரங்களின் உணவு உற்பத்திக்கு, அங்கிகளின் உடலை குளிர்ச்சியாக வைத்திருப்பதற்கு, அங்கிகளின் உடலில் போசணைப் பதார்த்தங்களை கொண்டு செல்வதற்கு, பூண்டுத் தாவரங்களை நிமிர்ந்த நிலையில் வைத்திருப்பதற்கு, விலங்குகளின் உணவுச் சமிபாட்டிற்கு, தாவரங்களில் கனியுப்புக்களை அகத்துறிஞ்சுவதற்கும் கடத்துவதற்கும் நீரானது உதவுகின்றது.

இத்தகைய நீரானது பல்வேறு வழிகளில் மாசடைகின்றது. தொழிற்சாலைக் கழிவுகள் நீருடன் கலத்தல், கழிவுநீர்க் கால்வாய்களை நீர்நிலைகளுடன் இணைத்து விடல், பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் போன்றவற்றை நீர் நிலைகளில் இடுதல், விவசாய இரசாயனப் பதார்த்தங்கள் நீர் நிலைகளுடன் கலத்தல், நீர்நிலைகளில் பல்வேறு பொருட்களை கழுவுதல், மிருகங்களை குளிப்பாட்டுதல், நகர்ப்புற குப்பை கூழங்கள் நீருடன் கலத்தல், எண்ணெய்க் கசிவுகள் போன்றன அவற்றுள் சிலவாகும்.

நீர்மாசடைதலையும், வீண் விரயமாவதையும் தடுப்பதற்கான சில வழிமுறைகள் பின்வருமாறு, குழாய்களில் இருந்துநீரை பெற்றுக்கொண்ட பின்னர் குழாய்களை இறுக மூடி விட வேண்டும். குழாய்கள் உடைந்து நீர் வெளியேறுமாயின் அவற்றை உடனடியாக சீர்செய்தல்வேண்டும். தற்போது இவ்வாறு நீர் வீண் விரயமாவதை தடுப்பதற்காக நீர் விநியோகக் கட்டணங்கள் அறவிடும் முறைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கின்றன.

இவ்வாறாக நீரினை பாதுகாக்க வேண்டியே 1992ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை சுற்றுச் சூழல் மற்றும் அபிவிருத்தி குறித்த கூட்டத்தை கூட்டியது. அக்கூட்டத்தில் நீர் வளப் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும், அதை மக்களிடம் உணர்த்த உலக நீர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி ஆண்டு தோறும் மார்ச் 22 ஆம் திகதி உலக நீர் தினம் சர்வதேச அளவில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

1993ஆம் ஆண்டு முதலாவது உலக நீர் தினம் கொண்டாடப்பட்டது.* இந்த வருட (2017) நீர் தினத் திற்கான தொனிப்பொருள்/ ஆய்வுப் பொருள் "நீரும் வீணாகும் நீரும்" (WATER AND WASTE WATER) என்பதாகும்.

இத்தினத்தை தொடர்ந்து இன்றுவரை கொண்டாடி வருகின்ற போதும் ஒவ்வொரு ஆண்டும் உலகில் பலகோடி மக்கள் நீர் இன்றி திண்டாடி வரும் நிலையும் எந்த வகையிலும் குறையவில்லை.

இன்று உலகில் உள்ள 80 நாடுகளில் 40 சதவீத மக்கள் போதியளவு நீர் கிடைக்காமல் அவதிப் படு கின்றார்கள். மக்கள் தொகை (இன்று உலக குடித்தொகை ஏறத்தாழ 7,500 மில்லியன்) அதிகரித்துக்கொண்டே இருக்க அவர்களுக்குத் தேவையான குடிநீர்த் தேவையும், பாவனைக்கான நீர்த் தேவையும் அதிகரித்த வண்ணமே உள்ளன. தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் கிடைக்கும் நீரைக் குடிக்கும் நிலைக்கு பல பகுதிகளில் உள்ள மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இதன் விளைவு கடுமையான நோய்த் தாக்கங்களாகும். இப்படியே நிலைமை தொடர்ந்தால் இன்னும் சில நூற்றாண்டுகளில் உலகமே பாலைவனமாக மாறிவிடும். மக்கள் குடிநீருக்காக ஒருவரை ஒருவர் கொன்று போடும் நிலைதான் ஏற்படும்.

நிலத்தடி நீரை பாது காக்க வேண்டியதும், நீர் ஆதாரங்களை காக்க வேண்டியதும், நீர் மாசுபடாமல் இருக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும் மனித சமுதாயத்தின் கடமையாகிறது. எனவே உலக நீர் தினமான இன்றைய நாளில் "நீரை மாசுபடுத்தாமல் உயிர் போல் காப்போம்" என்ற உறுதி மொழியை மனதில் ஏந்தி அதனை நிறைவேற்ற பாடுபடுவோம்.

# அரச அலுவலகங்களில் ஜெயலலிதாவின் படம் வைப்பதில் தவறில்லை

## தமிழக அரசு பதில் மனு

சொத்துக்குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றினால் தண்டனை பெற்ற மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் புகைப்படம், பெயர் ஆகியவற்றை அரசு அலுவலகங்களிலும், அரசு திட்டங்களிலும் பயன்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து சமூக நீதி சட்டத்தரணி பேரவையின் தலைவர் கே.பாலு, தி.மு.க. எம்எல்ஏ. அன்பழகன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றில் தனித்தனியாக வழக்கு தொடர்ந்தனர். அந்த மனுவில், அரச செலவில் ஜெயலலிதாவின் சமாதியை புதுப்பிப்பது சட்ட விரோதமாகும் என்றும் கூறியிருந்தனர்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி (பொறுப்பு) ஹுலுவாடி ஜி.ரமேஷ், நீதிபதி ஆர்.எம்.டி. டீக்காராமன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக பொதுத்துறை முதன்மை செயலாளர் சிவ்தாஸ் மீனா பதில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில் கூறியிருப்பதாவது,

தமிழக பொதுத்துறை கடந்த 1970, 1989 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளின்படி, அரசு அலுவலகங்களில் குடியரசு தலைவர், பிரதமர், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, திருவள்ளுவர், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் ராஜாஜி, தந்தை பெரியார், டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், வ.உ.சிதம்பரனார், காயிதே மில்லத், இந்திரா காந்தி, தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர்கள், தமிழக முதலமைச்சர் ஆகியோரது புகைப்படங்களை வைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாணைகளின் படி ஜெயலலிதாவின் புகைப்படங்கள் அரசு அலுவலகங்களில் வைக்கப்படுகிறது.

ஜெயலலிதா இறந்து விட்டதால், சொத்துக்குவிப்பு வழக்கில் அவருக்கு உச்ச நீதிமன்று தண்டனை விதிக்கவில்லை. எனவே, மறைந்த முதலமைச்சர் என்ற வகையில் அவரது புகைப்படங்களை அரசு அலுவலகங்களில்வைப்பதில்தவறு இல்லை. இந்த புகைப்படத்தை வைப்பதில் எந்த விதிமீறலும், சட்டவிரோதமும் இல்லை என அதில் கூறப்பட்டுள்ளது. (இ -12)


# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாகக் கட்டடம் கட்டம் -II, கோப்பாய் பிரதேச செயலக நிர்வாகக் கட்டடம் கட்டம் - I ஆகிய கட்டட வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1.விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2.தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. பொது நிதிச்சுற்றறிக்கை,4/2016 இற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது வட மாகாணத்திற்குள் தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 22.03.2017 தொடக்கம் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை விலைக் கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்டச் செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல 021 222 2771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

5.விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் நிர்வாகக் கிளை மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து 22.03.2017 முதல் 11.04.2017 வரை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 2,000 ரூபாய் கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

6.மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 11.04.2017 ஆம் திகதி அன்று பிற்பகல் 3.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 11.04.2017 ஆம் திகதி பிற்பகல் 3.45 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்.

8. கீழ் அட்டவணையில் குறிப்பிட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப் பிணை பொறுப்பு 120 நாட்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

9. PrebidMeeting 04.04.2017 முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம்(மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JF/ADM/con. Work Point pedro-II/11/10/2017 | பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாகக் கட்டடம் கட்டம் II | 9.40 | 06 | C7 | 94 000.00 | 2000 |
| JF/ADM/con. Work Kopay-I/11/08/2017 | கோப்பாய் பிரதேச செயலக நிர்வாகக் கட்டடம் கட்டம் I | 16.56 | 06 | C6 | 165 600.00 | 2000 |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்

(சி-7870)

# இளைஞர் கழகங்களை வளர்க்க அனைவரும் முன்வர வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பிரதேச மட்டத்தில் உள்ள இளைஞர் கழகங்களை வளர்ப்பதற்கு (வலுப்படுத்த) அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வட்டுக்கோட்டை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மைதானத்தில் விளையாட்டு கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற துடுப்பந்தாட்ட இறுதிப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேசங்களிலும் விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்கள் ஆரம்பித்து அவற்றை வளர்க்க வேண்டும்.

வெளி மாவட்டங்களில் இவ்வாறான இளைஞர் கழகங்கள் விளையாட்டு கழகங்களை ஊக்குவிப்பதற்காக எத்தனையோ உதவிகளை செய்கிறார்கள்.

எமது மாவட்டத்துக்கு வரவேண்டிய அனைத்து வளங்களையும் வெளி மாகாணங்களுக்கு கொண்டு சென்றுள்ளார்கள்.

இளைஞர்களுக்கான முழு அனுசரணையையும் ஊக்குவிப்பையும் வழங்க அரச, தனியார் நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

அப்போதுதான் இளைஞர்களை பல்வேறு பிரச்சினைகளில் இருந்து விடுவிக்கக்கூடியதாக இருக்கும்.



இவர்களுக்கு சரியான வளம் இல்லாத காரணத்தினால்தான் வீதிகளில் நிற்க வேண்டியுள்ளது.

ஒவ்வொரு இளைஞர்களும் தமது திறமையை வெளிக்காட்டஅவர்களுக்கு தேவையான வளங்கள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

இதற்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அமைச்சர் என்ற ரீதியில் என்னால் வழங்கக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்குவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பச்சை குத்தும் தொழிலில் ஈடுபட்ட ரஷ்யப் பிரஜைகள் இருவர் கைது

உரிய விசா அனுமதிப்பத்திரம் இன்றி நாட்டில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் இருவர் வெலிகம - மிரிஸ்ஸ பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சந்தேகநபர்களான 25 மற்றும் 30 வயதையுடைய ரஷ்யப் பிரஜைகள் இருவரும், பச்சை குத்தும் தொழிலில் ஈடுபட்டு வந்ததாகவும் தெரியவந்துள்ளது. (இ-7)

## தேர்தல் ஒகஸ்டிற்கு முன்னர் மகிந்த தேசப்பிரிய நம்பிக்கை

அமைச்சரவையின் அனுமதி விரைவாக கிடைக்கப் பெறுமாயின் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்திற்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தனியார் வானொலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார். (இ-7)

## பெண் பொலிஸாருக்கு பதவி உயர்வு

பெண் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் எட்டுப் பேர் பொலிஸ் அதிகாரிகளாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

புலனாய்வு சேவை, ஊழல் விசாரணை அலுவலகம், இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை உள்ளிட்ட பிரிவுகளில் கடமையாற்றிய எட்டு பேர், பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கு அமைய, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவினால் இவ்வாறு பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பெப்ரவரி 20ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## முந்திரிகை/ திராட்சை

Botanical Name: Vinifera
Family Name: Vitaceae
English N.:-Grapes
Sinhala Name: Muddrapalam



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பெரிய ஏறுகொம்புத் தாவரமாகும். கெட்டியான பற்றிப் பிடிப்பதற்குரிய தந்திக் கம்பிகள் (Tendrils ) நீண்டவை. இலைகள் 7.5- 15சென்ரி மீற்றர் நீளமானவை. வட்ட வடிவிலானவை. 5 சோணைகளைக் கொண்டவை. இவற்றின் விளிம்புகள் சமச்சீரன்று பற்களைக்கொண்டவை.

இலைக்காம்பு 3.8-7.5 சென்ரி மீற்றர் நீளமானவை. இலைகள் எதிரொழுங்கானவை. பூக்கள் பச்சை நிறமானவை. 5 இதழ்கள் கொண்டவை. பழங்கள் வெவ்வேறுஅளவுகளில்காணப்படும்.

நீலமும் கறுப்பும் கலந்தவை அல்லது பச்சை நிறமானவை. வித்துக்கள் 2-4 பேரிக்காய் வடிவானவை. பொதுவாக திராட்சைக் கொடி யாணபந்தலில் வளர்க்கலாம். இத் திராட்சை வகைகளுள் நீலம், பச்சை, திராட்சை, பன்னீர் திராட்சை வகைகள் மிகவும் முக்கியமானவை.

திராட்சை ரஷ்யாவைத் தாயகமாகக் கொண்டது. திராட்சை மிக வெப்ப மண்டலப் பயிராகும். விதை உள்ள திராட்சை, விதை இல்லாத திராட்சை என இரு வகைப் பழங்கள் உள்ளன.

விதை உள்ள திராட்சைப் பழங்களுக்கு மருத்துவப் பண்புகள் அதிகம். வேர் விட்ட இடைத் துண்டுகள் இனப் பெருக்கத்துக்கு பயனாகின்றன. வடிகால் வசதியுள்ள நிலமும் கார அமில நிலை 6.5-7.0 உள்ள நிலமும் பயிர்ச் செய்கைக்கு ஏற்றது.



மருத்துவப் பயன்கள்

திராட்சைப் பழங்களை நன்கு கழுவிய பின்பு அவற்றிலிருந்து சாறு பிழிந்து சீனி கலந்து காய்ச்சி சேமிப்பு இரசாயனப் பொருட்களை கலந்து சேமித்து வைத்துக்கொண்டு அவ்வப்போது அருந்தலாம்.

இதனால் தாகம் தணியும். உடலிற்கு ஊட்டத்தைக் கொடுக்கும். உடல் குளிர்ச்சி அடையும். இரத்தம் நன்கு சக்தியடையும். குடற்புண்களும் தணியும்.

உலர்ந்த திராட்சை பழங்களை தண்ணீரில் கழுவி சுத்தம் செய்து உண்பதில் ஊட்டச்சத்து மிகுந்ததாகவும் மலத்தை இளக்கும் தன்மை கொண்டதாகவும் இருக்கும். உடல்சூடு குறையும்.

தண்ணீர்விட்டு சுத்தம் செய்த பழங்களிலிருந்து தயாரித்த திராட்சை சாற்றுடன் சீவி கலந்து தர கர்ப்பிணிப் பெண்களுக்கு உண்டாகும் வாந்தி, வாய்க்குமட்டல், வாய்க்கசப்பு ஆகியவை குணமாகும்.

தண்ணீரில் கழுவிய உலர்ந்த திராட்சைப் பழங்களை இளஞ்சூட்டுடன் உள்ள நீரில் ஓர் இரவு ஊறவைத்து காலை அத்தண்ணீரிலேயே அதை பிழிந்து வடிகட்டி பிள்ளைக்கு கொடுக்க பலம் உண்டாகும். மலச்சிக்கல் நீங்கும், வாந்தி தீரும்.

திராட்சை விதைகளை உலர்த்தி நன்கு பொடித்து 4 கிராம்அதைவெந்நீரில்கொடுக்க புற்று நோய்க்கலன்களை வளரவிடாமல் தடுக்கும்.

மேற்படி பொடிக்கு 2 கிராம் அளவு வெண்ணெயில் கலந்து காலையும் மாலையும் கொடுக்க் வயிற் றுப் போக்கு குணமாகும்.

திராட்சை இலையை ஆறு மிளகு, சிறிது சீரகம் ஆகியவற்றுடன் குடிநீர் காய்ச்சி 30 மில்லி அருந்த அஜீரணத்தால் வரும் பேதி குணமாகும்.

அதி இரத்த அழுத்தம் உடையவர்கள் கூட இப் பழச் சாற்றை தினம் ஒரு வேளை சாப்பிடுவது நல்லது. கல்லீரல், மண்ணீரல் ஆகிய உள் உறுப்புகட்கு திராட்சை வலிமை தருவதுடன் அவை நோய் வாய்ப்பாட்டில் இலகுவில் நல்ல நிலைமையை அடையச் செய்யும். 20 கிராம் உலர்ந்த திராட்சையை நெய்யில் பொரித்து சாப்பிட வறட்டு இருமல் நீங்கும்.

திராட்சைப் பழத்தை பன்னீரில் ஊற வைத்து பின்பு பிழிந்து அதேயளவு பசுப் பால் கலந்து இரவில் அருந்த உடற் தாதுக்கள் பலம் பெறுவதால் உடல் பலம் பெறும்.

சீமை அத்திப்பழம் இரண்டு, உலர்ந்த திராட்சைப்பழம் 10 கிராம் இரண்டையும் பாலில் கலந்து காய்ச்சி தினம் காலையில் சாப்பிட்டு வர கண்களுக்கும் மூளைக்கும் நல்ல வலிமையைக் கொடுக்கும்.

40 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு கால் எரிச்சல், தலைச்சுற்றல் ஆகியன நீங்கும். நமது அன்றாட உணவுப் பழக்கத்தில் திராட்சையை பழக்கிக் கொண்டால் நோய் வராது தடுக்கலாம். வந்த நோயையும் போக்கலாம்.

100 கிராம் பழத்தில் அடங்கியுள்ள சத்துக்கள்

| | நீலம் | இளம் பச்சை | உலர்ந்த திராட்சைப் பழங்கள் |
|---|---|---|---|
| புரதம் (கிராம்) | 0.6 | 0.5 | 1.8 |
| கொழுப்பு (கிராம்) | 0.4 | 0.3 | 0.3 |
| நார்ப்பொருள் (கிராம்) | 2.8 | 2.9 | 11 |
| காபோவைதரேற்று (கிராம்) | 13.1 | 16.5 | 74.6 |
| கல்சியம் (மி.லீ) | 20 | 20 | 87 |
| பொஸ்பரஸ் (மி.கி) | 23 | 30 | 80 |
| ரைபோபிளேவின் (மி.கி) | .03 | 0 | 0.19 |
| நியாசின் (மி.கி) | 0.2 | 0 | 0.7 |
| உயிர்ச்சத்து (மி.கி) | 1.0 | 0 | 1.0 |
| கரோட்டின் (மைரோ கிராம்) | 3.0 | 0 | 2.4 |
| இரும்பு (மி.கி) | 0.5 | 0.5 | 7.7 |

திராட்சை சம்பல்

திராட்சை- 1 கிலோ
சீனி அல்லது தேன்- 2
ஏலக்காய் -4
இஞ்சி (தோல் சீவியது) 1 சிறிய துண்டு)

திராட்சைப்பழத்தை சாறு பிழிந்து வடிகட்டிக்கொண்டு எலுமிச்சம்பழச்சாறு , சீனி, இஞ்சிச் சாறு, ஏலக்காய்த் தூள் ஆகியவற்றை கலந்து கொள்ள வேண்டும். சீனி நன்றாக கரைந்த பின்பு சர்பத்தாக பயன்படுத்தலாம். உடல் பலம் பெறுவதுடன் குளிர்ச்சியும் அடையும்.

திராட்சை ரசம் புளித்து நுரைக்கும் போது அடியில் தங்கி நிற்கும் உப்புக்கு திராட்சை உப்பு என்பது பெயர். இது மிகவும் புளிப்பானது. இதனையே grape sugar அல்லது Tataric acid எனக் கூறுவர். இது கழிச்சலையுண்டாக்கும்.

# ஒன்றரை இலட்சம் தமிழ் மக்கள் வன்னிப்போரில் கொல்லப்பட்டனர்

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

வன்னியில் இடம்பெற்ற மூன்று தசாப்தகால போரில் ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.



கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழான த ஐலண்ட் பத்திரிகை இந்தச் செய்தி யை வெளியிட்டுள்ளது.

இந்தியாவின், டில்லியில் அண்மையில் நடைபெற்ற பயங்கரவாதத்திற்கு எதிரான மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் கூறியுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் யுத்தம் காரணமாக 50 வீதமான தமிழர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் எதிர்க் கட்சித் தலைவரை மேற்கோள் காட்டி தி ஐலண்ட் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் கீழ், சர்வதேச மனித உரிமை சட்டங்கள், சர்வதேச மனிதாபிமான சட்டங்களை ஆயுதமேந்திப் போராடிய குழு மற்றும் இலங்கை அரசாங்கம் என இருதரப்பினரும் மீறியுள்ளதாக 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையினால் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அமுலாக்கம் தொடர்பில் தற்போது ஜெனிவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையினால் மீளாய்வு செய்யப்படுகின்றது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளதாக த ஐலண்ட் கூறியுள்ளது.

நிலைமாற்று நீதி நடைமுறைகள், காணிகள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர், தடுத்து வைக்கப்பட்டிருப்போர் மற்றும் இந்த முரண்பாட்டிற்கு நியாயமானதும், ஏற்றுக் கொள்ளத்தக்கதுமான ஓர் அரசியல் தீர்வைக் கொண்டு வரக்கூடிய அரசியலமைப்பு ஏற்பாடுகளை வகுத்தல் போன்ற விடயங்களை இந்தத் தீர்மானம் ஆராய்வதாக டில்லியில் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார் என்றும் த ஐலண்ட் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## உடுவே தம்மாலோக தேரரை கைது செய்யுமாறு உத்தரவு

(கொழும்பு)

அனுமதியின்றி வெளிநாடு சென்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள உடுவே தம்மாலோக தேரரைக் கைது செய்யுமாறு, கொழும்பு மேலதிக நீதவான் துலானி அமரசிங்க பிடியாணை பிறப்பித்துள்ளார்.

பொதுமக்களுக்கு பிரச்சினை ஏற்படும் வகையில் ஒலிபெருக்கியை பயன்படுத்தியமைக்கு எதிராக, முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட உள்ளிட்ட குழுவினர் தாக்கல் செய்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



இதன்போது , கடந்த வழக்கு விசாரணையின் போது வாக்குறுதியளித்தபடி, தம்மாலோக தேரர், நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இதன் காரணமாகவே அவரைக் கைதுசெய்ய பிடியாணை பிறப்பித்து நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-7)

## பஸ்நாயக்க நிலமேயின் வீட்டில் சட்டவிரோத யானைத்தந்தம்



(கொழும்பு)

வனப் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் மற்றும் தலாதுஓய பொலிஸார் ஆகியோர் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பில் பஸ் நாயக்க நிலமேயின் வீட்டிலிருந்து யானைத் தந்தங்கள் இரண்டு மீட்கப்பட்டுள்ளன.

வீட்டில் யானைத் தந்தங்கள் காணப்பட்டதாகவும், அதில் இரண்டு சோடிக்கு அனுமதிப் பத்திரங்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அனுமதிப் பத்திரம் இல்லாத ஒரு சோடி தந்தங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பஸ்நாயக்க நிலமே மேலதிக விசாரணைகளுக்கு கண்டி நீதிமன்றத்துக்கு அழைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## நிலைபேறான பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முயற்சியை நல்லாட்சி ஆரம்பித்துள்ளது




நல்லாட்சி அரசாங்கம் நிலைபேறான பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முயற்சியை ஆரம்பித்துள்ளதென தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் இடம்பெற்ற கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையமும், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவும் ஏற்பாடு செய்திருந்த முதலீட்டு மாநாட்டில் நேற்று முன்தினம்இவ்வாறு உரையாற்றினார்.

அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

புதியதொரு இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கமாக அரசாங்கம் விசேட பொருளாதார திட்டங்களை அறிமுகம் செய்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொருளாதார மறுசீரமைப்பின் ஊடாக முதலீட்டாளர்களைக் கவர்வது அரசாங்கத்தின் நோக்கமாகும். இலங்கையில் முதலீடு செய்வோருக்கு கூடுதல் சலுகைகளை வழங்க அரசாங்கம் தயாராகவிருக்கிறதென இராஜாங்க அமைச்சர் கூறினார்.

கொழும்பு பங்குச்சந்தை ஊடாக இலங்கையின் சந்தையில் இணைந்து கொள்ளுமாறு அதன் தலைவர் வஜிர குலதிலக்க வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் இதன் போது கோரிக்கை விடுத்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 30 | 60 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 90 | 120 | 120 | 100 | 100 |
| தக்காளி | 120 | 100 | 40 | 120 | 90 | 140 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 30 | 100 | 20 | 30 | 40 | 50 | 40 |
| கரட் | 80 | 100 | 80 | 80 | 60 | 120 | 50 |
| பூசணி | 50 | 60 | 30 | 50 | 60 | 60 | 60 |
| புடோல் | 80 | 60 | 50 | 120 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 80 | 70 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 75 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 300 | 150 | 240 | 160 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 150 | 80 | 100 | 80 | 160 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | - | 50 | 60 | 100 | 70 |
| பயற்றங்காய் | 120 | 100 | 90 | 120 | 80 | 160 | 120 |
| லீக்ஸ் | 50 | 100 | 60 | 80 | 70 | 80 | 60 |
| பீற்றூட் | 50 | 100 | 40 | 50 | 50 | 80 | 70 |
| கறிமிளகாய் | 160 | 100 | 80 | 100 | 120 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 400 | 320 | 270 | 40 | 300 |
| போஞ்சி | 150 | 200 | 50 | 240 | 120 | 200 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 20 | 10 | 40 | 20 | 30 | 40 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 20 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 10 | 80 | 80 | 80 | 30 |
| தேங்காய (ஒன்று) | 70 | 80 | 20-70 | 70 | 70 | 50-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | 180 | 200 | 200 | 200 | 140 |
| வெங்காயப்பூ | 80 | 100 | 40 | 80 | 100 | 160 | 60 |
| முள்ளங்கி | 60 | 100 | 25 | 60 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 250 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 70 | 60 | 50 | 60 | 50 | 80 | 60 |

ஏதாவது ஒரு இலட்சியத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வையுங்கள். அந்த நம்பிக்கை அறிவுபூர்வமான தாக இருக்கட்டும்.

– இராமகிருஷ்ண பரமகம்சர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நம்பியவர்கள் துரோகம் இழைத்தால் நம்பிக்கையால் என்ன பயன்!

இனப் படுகொலையில் இருந்தும் மனிதப் பேரவலத்தை சந்தித்தும் மீண்டெழுந்த தமிழினம் நம்பிக்கையை ஒரு போதும் கைவிட்டு விடக்கூடாது என கனடா நாட்டின் ரொறன்ரோ மாநகரின் மேயர் ஜோன் ரொரி தெரிவித்துள்ளார்.

விசேட பயணத்தை மேற்கொண்டு சில தினங்களுக்கு முன்னர் முல்லைத்தீவுக்கு வருகை தந்த ஜோன் ரொரி, போரினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஜோன் ரொரியின் விசேட உரை தமிழ் மக்களுக்கு ஆறுதல் தரவல்லது. அதிலும் ரொறன்ரோ மாநகரின் மேயராக இருக்கக்கூடிய ஒருவர் வன்னி யுத்தத்தை இன அழிப்பாகவும் மனிதப் பேரவலமாகவும் கூறியிருப்பது,

வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவராவது எங்களின் அவலத்தைப் புரிந்து வைத்துள்ளார் என்பதனூடாக எங்களை ஆற்றுப்படுத்துகிறது.

அதேவேளை நம்பிக்கையை இழந்து விடாதீர்கள் என்று அவர் கூறியிருப்பதும் கூற வேண்டிய வார்த்தையாயினும் எங்ஙனம் நம்பிக்கையோடு இருப்பது என்பதுதான் நம்மிடம் எழுந்துள்ள மிகப்பெரும் ஐயம்.

கவிஞர் கண்ணதாசன் கூறியதுபோல "…காஞ்சுபோன பூமியெல்லாம் வற்றாத நதியைப் பார்த்து ஆறுதல் அடையும் அந்த நதியே வற்றிப் போய்விட்டால்…

அடி தாங்கும் உள்ளம் இது இடி தாங்குமா இடிபோல … வந்தால் மடி தாங்குமா?

இந்தப் பாடல் வரிகள்தான் நம் நினைப்புக்கு வருகிறது.

ஆம், எங்கள் இனத்தை சங்காரம் செய்யும் கொடும் போரை இலங்கை அரசு வன்னியில் நடத்தியது. பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழித்தது.

மிகப்பெரும் மனிதப் பேரவலத்தைச் சந்தித்த தமிழ் மக்கள் ஒருபோதும் நம்பிக்கையை இழக்க வில்லை. விழுந்தாலும் எழுவோம் என்ற அசையாத நம்பிக்கை எங்களிடம் இருந்தது.

அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இலங்கைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தோம். வடக்கு மாகாணத்தில் தமிழர் அரசு மலர வழிவகுத்தோம்.

ஆனால் நாங்கள் வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பி வைத்த எங்கள் அரசியல் தலைமை எங்களுக்கு நடந்த கொடூரத்தையெல்லாம் மறந்து,

பதவிக்காக அரசுடன் இணைந்து எங்களை விலைபேசிய போது நாங்கள் நம்பிக்கையை இழக்க வேண்டியதாயிற்று.

என்ன செய்வது! முள்ளிவாய்க்காலில் இருந்து நந்திக்கடல் வழியே வெளியேறிய போதும்; முட்கம்பி வேலிக்குள் மூன்று இலட்சம் மக்களாக எங்களை அடைத்த போதும்; நடுநிசியில் எங்கள் உறக்கம் கலைத்து உறவுகளை இழுத்துச் சென்ற போதும் மன உறுதியையும் நம்பிக்கையையும் இழக்காத நாம் இன்று அதை அடியோடு இழந்து விட்டோம்.

இலங்கை அரசுக்கு கால அவகாசம் கொடு, சர்வதேச விசாரணை முடிந்து விட்டது.

விடுதலைப் புலிகளும் போர்க்குற்றம் புரிந்துள்ளனர் என எங்கள் வாக்குகளைப் பெற்று எம்பிப் பதவியை எடுத்தவர்களே கூறும் போது, தமிழர்கள் எங்ஙனம் நம்பிக்கையுடன் வாழ்வது?

ஆம், வற்றாத நதியைப் பார்த்து ஆறுதல் அடைந்த காய்ந்த பூமி அந்த நதியே வற்றி விட்டால் எப்படி ஆறுதல் அடைய முடியாதோ அதுபோலத்தான் ஈழத் தமிழர்களாகிய நாமும் என்பதை ரொறன்ரோ மேயருக்கு பணிவோடு சொல்லித்தானாக வேண்டும்.

# தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

## வடக்கு மாகாண பட்டதாரிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தொற்று நோய்களுக்கு மத்தியிலும் போராடி வருகின்ற எம்மை அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் பாராமுகமாக இருப்பது வேதனையளிப்பதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண பட்டதாரிகள், தமக்கான தீர்வு கிடைக்கும் வரையில் தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர். அரச வேலை வாய்ப்பு கோரி நேற்று 23 நாளாகவும் யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர் வடக்குமாகாண பட்டதாரிகளாகிய நாம் கடந்த மூன்று வாரங்களாக அரச நியமனம் கோரி இரவு பகலாக போராடி வருகின்றோம். இந்த போராட்டத்தில் பெருமளவிலான பெண் பட்டதாரிகளும் இணைந்து இரவு பகலாக போராடி வருகின்றனர்.

தற்போது யாழில், பன்றிக் காய்ச்சல், டெங்குக் காய்ச்சல் பரவி வருவதாக சுகாதாரத் துறையினர் கூறி வருகின்றனர். ஆனால் நாங்கள் இங்கு இரவிலும் பகலிலும் டெங்கு நுளம்பு கடியிலும், வெயிலிலும் பனியிலும் போராடி வருகின்றோம். ஆனால் எம்மை யாரும் பார்க்கவில்லை. எமது அரசியல் வாதிகளும் எம்மை வந்து பார்ப்பதனை நிறுத்தி விட்டனர்.

இதே போன்று ஏனையவர்களும் பாராமுகமாக இருந்து வருகின்றனர். வீட்டில் வயோதிப பெற்றோரினை பார்வையிடாது இங்கு வந்து போராடிக் கொண்டுள்ளோம். அவர்கள் எம்மை படிக்க வைத்த போதும் கஷ்டத்தை அனுபவித்தார்கள். இப்போதும் கஷ்டத்தை அனுபவிக்கின்றார்கள். இந்த நிலையில் தான் எமது போராட்டம் இருபத்து மூன்றாவது நாளாகவும் தொடர்கின்றது.

யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக போராடி வருகின்ற எமக்கு சமூக அமைப்புகள் அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்கி போராட்டத்தில் ஈடுபட வேண்டும். அதன் மூலமே அரசிற்கு போதிய அழுத்தத்தை வழங்கி எமக்கான தீர்வைப்பெற்று விட முடியும். இந்த போராட்டம் எமக்கானது என்று நினைத்து விடாதீர்கள். எதிர்கால சந்ததிகளின் நலன்களுக்காகவும் இந்த போராட்டம் நடைபெறுகின்றது என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-4)

# இந்திய மீனவர்களை தாக்கி கைது செய்தது இலங்கைக் கடற்படை

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்து கொண்டிருந்த 10 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இலங்கை கடற்படை தம்மை கைது செய்யும்போது தாக்கியதாக கைதாகியுள்ள இந்திய மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். நேற்று முன்தினம் இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் இழுவைப் படகுகளில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் காங்கேசன்துறை கடற்படை துரத்தியுள்ளது.

இதன்போது இயந்திரம் பழுதடைந்த நிலையில் தப்பிச் எசெல்ல இயலாத நிலையில் ஒரு இழுவை படகும் அதிலிருந்த 10 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள் தமிழகம் இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. இதேவேளை கைதான மீனவர்கள் நேற்றைய தினம் மாலை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே தம்மை கைது செய்யும் போது இலங்கை கடற்படையினர் தாக்கியதாகக் கூறிய இந்திய மீனவர்கள் கடற்படையின் தாக்குதலில் தங்களில் ஒருவர் காயமடைந்ததாகவும் கூறினர். அண்மையில் இந்திய மீனவர் ஒருவரை இலங்கை கடற்படை சுட்டுக்கொன்றதாக கூறப்படுகின்ற நிலையில், மீண்டும் இலங்கை கடற்படை தம்மை தாக்கியுள்ளதாக கைதாகியுள்ள இந்திய மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-4)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

உரும்பிராய்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் திருக்குமரன் சனசமூக நிலையத்தில் சங்கத் தலைவர் சி.கிருஷ்ணானந்தன் தலைமையில் இடம்பெறும். (இ-12)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### இறைவனைக் காண்பது எப்படி?



✦ புதிதாகப் பிறந்த கன்றுக்குட்டி நிற்கக் கற்றுக் கொள்வதற்கு முன்னால் தட்டுத்தடுமாறிப் பலமுறை கீழே விழுவதுபோல, இறையருளைப் பெறுவதில் வெற்றி காண்பதற்கு முன் அநேக தவறுகள் பலமுறை நேரும்.

✦ எறும்பு விடாமுயற்சியுடன் இரை இருக்குமிடத்தை அடைந்து, அதைக் கவ்விக்கொண்டு, தனது இருப்பிடத்திற்கு கொண்டு சென்று உண்ணுகிறது. அதுபோல பக்தர்களும் இறைவனை விடாமுயற்சியுடன் வணங்கி, அவன் அருளைப் பெற வேண்டும்.

✦ பாலில் வெண்ணெய் இருக்கிறது என்று கத்தினால் வெண்ணெய் கிடைக்காது. அதை தயிராக்கிக் கடைய வேண்டும். "இறைவா! இறைவா!" என்று சொல்வதால் மட்டும் பலனில்லை. அவனைக் காண விரும்பினால் அதற்கேற்ற முயற்சிகளை செய்ய வேண்டும்.

✦ மீனைப் பிடிக்க வேண்டும் என்ற ஆவலுடன் தூண்டில்காரன், இரையை விடாமுயற்சியுடனும் பொறுமையுடனும் தண்ணீரைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அதுபோல, பொறுமையுடன் மார்க்கங்களைக் கடைப்பிடிக்கும் ஒருவன் இறைவனைக் காண்பது நிச்சயம்.

## இரட்டை இலைச் சின்ன விவகாரம்

# ஓ.பி.எஸ்ஸுக்கு ஆதரவாக 6000 பேர் நேற்று தேர்தல் ஆணையத்தில் பிரமாணப் பத்திரம்

(டில்லி)

இரட்டை இலைச் சின்னம் தொடர்பாக ஓ.பி.எஸ். அணி டில்லி தலைமை தேர்தல் ஆணையத்தில கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளது. ஓ.பி.எஸ்ஸுக்கு ஆதரவாக 6,000 பேர் தேர்தல் ஆணையத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளனர்.

மேலும் 43 இலட்சத்துக்கும் அதிகமான தொண்டர்கள் தங்களுக்கு ஆதரவாக உள்ளதாகவும் தேர்தல் ஆணையத்திடம் ஓ.பி.எஸ். அணி தெரிவித்துள்ளது. சசிகலாவின் அதிகார வெறியால் அ.தி.மு.க. இரண்டாக உடைந்ததையடுத்து ஓ.பி.எஸ். தரப்பு சசிகலா அ.தி.மு.க. பொதுச்செயலாளராக நீடிக்க எதிர்ப்பு தெரிவித்தது. அ.தி.மு.க. பொதுச் செயலாளராக சசிகலாவின் நியமனம் செல்லாது எனக் கூறி தேர்தல் ஆணையத்திடம் ஓ.பி.எஸ். தரப்பு எம்.பிக்கள் புகார் அளித்தனர். மேலும் உண்மையான அ.தி.மு.க. தாங்கள் தான் என கூறிய ஓ.பி.எஸ். தரப்பு இரட்டை இலை சின்னத்தை தங்களிடமே வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தது. ஆர்கே நகர் இடைத் தேர்தல் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இரட்டை இலைச் சின்னத்தை தங்களுக்கே வழங்க வேண்டும் என ஓ.பி.எஸ். தரப்பு வலியுறுத்தி வந்தது.

சசிகலா தரப்பு அ.தி.மு.க. வினரும் இரட்டை இலைச் சின்னம் தங்களுக்குத்தான் என கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் இது தொடர்பாக இருதரப்பினரும் நாளை காலை தேர்தல் ஆணையத்தில் ஆஜராக தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. (இ-12)

## அதிபர் சேவையைச் சேர்ந்தோரிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ். வலயத்திற்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடங்களுக்கு யாழ். வலயத்தில் கடமையாற்றும் அதிபர்சேவையை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நிபந்தனைகள்

வகை II பாடசாலைகளுக்கு வகுப்பு 2 ஐச் சேர்ந்த அதிபர்களும் வகுப்பு 2 அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் வகுப்பு 3 ஐச் சேர்ந்த அதிபர்களும் அத்துடன் தற்போது அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நியமனத்தை ஏற்றுக்கொண்ட அதிபர் வகுப்பு 3 இனைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

1. யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம் வகை 2
2. யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை வகை 2

இவ்விண்ணப்பங்கள் நேர் முகப்பரீட்சைக் குழு ஒன்றின் மூலம் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பப்படிவங்களை யாழ்.கல்வி வலயத்தில் பொது நிர்வாகக் கிளையில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 06.04.2017 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் சாந்தசோலை, கொக்கெலிய இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் பெரியநீலாச்சேனை, இத்திக்கண்டல், சொர்ணபுரி, பாப்பாமோட்டை, அடம்பன், பரப்பாங்கண்டல், அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# உடுவில் பிரதேசத்திற்குட்பட்ட பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி

## ஸ்ரீமுருகன் சம்பியன்



உடுவில் பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான (Youth Meet 2017) பெண்களுக்கான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து 5ஸ்டார்வி.க அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய Five Star விளையாட்டுக் கழகம் 5 ஓவர்கள் நிறைவில் 46 ஓட்டங்களை பெற்றது.பதிலுக்கு களமிறங்கிய மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் நவரூபனாவின் மற்றுமொரு அசத்தலான அனல் பறந்த அதிரடி ஆட்டத்தின் மூலம் 3 ஆவது ஓவரில் இலக்கு இழப்பின்றி 49 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் நவரூபனா 32 ஓட்டங்களைப் பெற்றார். (க)

# கட்டுமரம் வலித்தல் போட்டி ரேவடி அணி முதலிடம்



வல்வை விளையாட்டுக் கழகத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வல்வை உட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் மாபெரும் விளையாட்டுப் போட்டிகளின் வரிசையில் கடந்த வெள்ளிக்கிழமை கடல்சார் விளையாட்டுக்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

கட்டுமரம் வலித்தல் போட்டியானது ஊறணி தீர்த்தக் கடற்கரையில் ஆரம்பித்து ரேவடிக் கடலில் முடிவடைந்தது. இப்போட்டியில் ரேவடி அணி முதலிடத்தினை பிடித்தது. (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் கே. சி.சி.சி வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக் கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்த விளையாட்டுக் கழகங்கள் இச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்ற முடியும். விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் 077 404 7908 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# நவஜீவன்ஸ் வீரர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## BLUE FINGERS வெற்றி



நவஜீவன்ஸ் கழக வீரர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்று போட்டி 18.03.2017 அன்று இடம் பெற்ற 2 ஆவது போட்டியில் BULE FINGERS அணியை எதிர்த்து WHITE BRAIN அணி மோதியது. ஆட்ட ஆரம்பமே மந்தமாக அமைந்தது.

WHITE BRAIN நம்பிக்கை வீரர் பிரியா இல்லாது களம் இறங்கியது . எனினும்BULE FINGERS இன் ஆட்டமானது வேகம் குறைவாக அமைய அதற்கு ஈடாக எதிரணி தடுப்பாட்டத்தில் முனைப்பாக ஈடுபட்டது.

இதனால் BULE FINGERS கோல் போடும் வாய்ப்புக்கள் இடைவேளையின் முன்பு முறியடிக்கப்பட, இடைவேளையின் பின்பு வெற்றி ஈட்ட வேண்டிய வேகத்தில் கள மாற்றம் BULE FINGERS மாற்றியமைக்கப்பட்டு லாபகமாக கோபியால் ஒரு கோல் போட, ஆட்டம் விறுவிறுப்படைந்தது.

பின் மேலும் அவருக்கு கிடைத்த இரு வாய்ப்பையும் தலையால் கோலாக்க 3:0 என்றடிப்படையில் வெற்றியீட்டியது. BLUE FINGERS அணி. இப்போட்டியின் ஆட்டநாயகனாக கு.கோபிநாத் தெரிவானார். (க)

# கரைச்சிப் பிரதேச விளையாட்டு விழா-2017 கனகபுரம் சம்பியன்



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக விளையாட்டு விழா 2017 இல் கனகபுரம் விளையாட்டுக் கழகம் முதலாவது இடத்தினை பெற்று சம்பியனானது. வருடந்தோறும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இடம்பெறுகின்ற விளையாட்டு விழா இம்முறை கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. கரைச்சி பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பதிவு செய்யப்பட்ட கழகங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கு கொண்டிருந்தனர். குறிப்பாக ஜெயந்திநகர் மகாதேவா சைவ சிறார் (குருகுலம்) இல்ல மாணவர்களும் மகாதேவா விளையாட்டுக் கழகம் மூலம் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு பல போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் வட மாகாண விளையாட்டுத்துறை பிரதிப் பணிப்பாளர் குருபரன்,மாவட்ட செயலக பிரதி திட்டப் பணிப்பாளர் கௌரிதாசன், பளை பிரதேச செயலாளர் ஜெயராணி, விளையாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க)

# புதிய விடியல் உதைபந்தாட்டம் ஞானமுருகன் அணி வெற்றி



யாழ்ப்பாணம், வலிகாமம் , பருத்தித்துறை, வடமராட்சி, தீவக லீக்குகளின் அனுமதியுடன் நடைபெறும் "புதிய விடியல்-2017" உதைபந்தாட்ட தொடரில்

19.3.2017 அன்று நடைபெற்ற போட்டியில் ஞானமுருகன் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரத் அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது.

ஞானமுருகன் அணி சார்பாக ஜெகன், தசரதன், வகின்சன், தாராகன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலினைப் போட்டனர்.

அடுத்த போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணியுடன் 26.03.2017 அன்று மோதவுள்ளது ஞானமுருகன் அணி. (க)



உடுவில்பிரதேசத்திற்குட்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் சிவன் வி.க எதிர்த்து மோதிய மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் வெற்றிவாகை சூடி கிண்ணத்தை கைப்பற்றியது.

# கலப்பு நீதிமன்றம், வெளிநாட்டு நீதிபதிகள் கோரிக்கைக்கு இடமே இல்லை - ரணில்

கலப்பு நீதிமன்றத்தை அமைப்பதற்கோ அல்லது வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதாகவோ ஐ.நா மனித உரிமைகள் பேரவையிடம் ஒரு போதும் ஒத்துக்கொள்ளவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அனுமதிக்க ஒத்துக் கொண்டிருந்தால் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக போர்க் குற்ற விசாரணைகள் இடம்பெற வாய்ப்பு இருந்திருக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு தொடர்பில் சர்வதேச கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதா என்பது குறித்து ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த வகையிலேயே பிரதமர் இதனைக் கூறினார் ஐ.நாவில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டு இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் 2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பகுதிகளையும் பிரதமர் நேற்று நாடாளுமன்றத்தில் ஒவ்வொன்றாக வாசித்துக் காண்பித்தார்.

வெளிநாட்டு நீதிபதிகளை அழைப்பதாக அதில் கூறப்பட்டிருக்கவில்லை என்றும், உள்ளகப் பொறிமுறைக்காக வெளிநாட்டவர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கே ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

ஐ.நா மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் செயித் ராட் அல் ஹுசைனின் அறிக்கையிலேயே சர்வதேச நீதிபதிகள் மற்றும் கலப்பு நீதிமன்றம் போன்ற பரிந்துரைகள் காணப்பட்டுள்ளதாகவும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

"முன்னாள் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் நியூயோர்க் நகருக்குச் சென்று வழக்குத் தொடர்வதற்கு சம்மதம் தெரிவித்துக் கொண்டனர். அதன் ஓரங்கமாகவே பீல்ட் மார்ஷலை இழுத்துச் சென்று கூண்டில் அடைத்தனர்.

பின்னர் அப்போதிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் 2014ஆம் ஆண்டு ஜெனிவா சென்று, மூதூர், திருகோணமலை போன்ற விவகாரங்களுக்கு வழக்கு தொடர்வதாக என்று கூறியிருந்தார். ஆனால் எமது பிரதிநிதிகள் அப்படி செய்யவில்லை. 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு நாங்கள் ஆதரவு அளிக்கின்றோம். ஆனால் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை ஆராய்ந்த பின்னரே அறிவிப்போம்.

சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றத்திற்கு ஒருபோதும் நாங்கள் இணங்கப்போதில்லை. ஜனாதிபதியும் இதனைக் கூறியிருந்தார். சபையில் நான் இன்றும் இதனைக் கூறுகின்றேன். கடந்த ஆட்சியாளர்கள் சுமத்தியிருக்கும் கடன் அளவுப் பிரச்சினையையும், வழக்கு தொடர்வதாக கூறி ஏற்படுத்திய சுமையையும் தீர்க்க வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் உள்ளோம்.

இலங்கை உள்ளக நீதிமன்றப் பொறிமுறையை அமைக்கும் அதிகாரம் அரசியலமைப்புக்கும், நாடாளுமன்றத்திற்குமே உள்ளது என்றார். (11)

# கேப்பாப்பிலவு மக்களின் துயரம்

(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு மக்களின் தொடர் நில மீட்பு போராட்டம் நேற்று 21ஆவது நாளாக தீர்வின்றி தொடர்கின்றது.

கடந்த முதலாம் திகதி பிலவுக் குடியிருப்பு மக்களின் போராட்டம் வெற்றி பெற்று நிறைவுக்கு வந்ததைத் தொடர்ந்து கேப்பாப்பிலவு மக்கள் சொந்தக் காணிகளில் கால் பதிப்பதற்கான போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில் பல்வேறு தரப்பினரின் ஆதரவுடன் கேப்பாப்பிலவு மக்களின் தொடர் போராட்டம் தீர்வின்றிய நிலையில் இடம் பெற்று வருகின்றது.

கேப்பாப்பிலவு இராணுவ படைகட்டளைத் தலைமையத்துக்கு முன்பாக கூடாரம் அமைத்து தொடர் போராட்டத்தை மக்கள் முன்னெடுத்துள்ளனர்.



இந்நிலையில் தாம் இருபத்தொரு நாளாக வீதியிலிருந்து போராடுகிறோம். இருப்பினும் எமது அரச அதிபரோ பிரதேச செயலாளரோ இதுவரை தம்மைச் சந்தித்து கலந்துரையாடவில்லை என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (281)

# முகநூலில் அவதூறு பொலிஸார் நடவடிக்கை

(கரணவாய்)

இளைஞர் ஒருவரை அவதூறாக முகநூல் கணக்கில் பதிவேற்றிய நபர் ஒருவரை கடும் எச்சரிக்கை செய்து அக்கணக்கையும் அழிப்பித்து அனுப்பிய சம்பவம் நெல்லியடிப் பொலிஸில் நேற்று இடம் பெற்றுள்ளது.

நெல்லியடி நகரில் முச்சக்கர வண்டி செலுத்தும் இளைஞர் ஒருவரின் படத்தினைப் போட்டு தன்னைப் பற்றி எழுதப்பட்டிருந்ததாக தெரிவித்து பாதிக்கப்பட்ட இளைஞர் நெல்லியடி பொலிஸில் 20.03.2017 அன்று முறைப்பாட்டை பதிவு செய்தார்.

இது தொடர்பில் விசாரணை செய்த நெல்லியடிப் பொலிஸார் கணக்கு வைத்திருப்பவரை கண்டு பிடித்து கடும் எச்சரிக்கை செய்ததுடன் கணக்கையும் அழித்துள்ளார். (60)

# தேர்தல் அச்சம் அரசுக்கு இல்லை

இந்த வருடத்துக்குள் மூன்று மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் கட்டாயம் இடம்பெறும்.

தேர்தல் குறித்து அரசாங்கத்துக்கு எவ்வித அச்சமும் இல்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செயலாளரும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சில் நேற்று மாகாணங்களுக்கான மீனவ அமைப்புகளுக்கான சம்மேளனத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (11)

# ஆவா குழு உறுப்பினர்கள் இருவர் கைக்குண்டுகளுடன் கொழும்பில் கைது

## பொலிஸார் நாடு முழுவதும் வலைவீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல பகுதிகளில் சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்து தலைமறைவாகியிருந்த ஆவா குழுவை சேர்ந்த மேலும் இரண்டு உறுப்பினர்களை கைக்குண்டுகளுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இருவரையும் கொட்டாஞ்சேனை பகுதியில் வைத்து யாழ். பொலிஸ் பிரிவின் சிறப்பு பொலிஸார் கைது செய்துள்ளதாக அறியமுடிகின்றது.

சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சமூகவிரோத செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் மற்றும் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை ஆவா குழுவைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் கொட்டாஞ்சேனை பகுதியில் மேலும் மூவரை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வந்த ஆவா குழுவின் பிரதான உறுப்பினர்கள் அண்மைக் காலத்தில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் உறுப்பினர்கள் தலைமறைவாக இருந்து வருகின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி நாடு முழுவதிலும் பரவியுள்ளனர் என நேற்று முன்தினம் பொலிஸ் தலைமையகம் வெளியிட்டிருந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தலைமறைவாக இருக்கும் ஆவா குழு உறுப்பினர்களை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையிலேயே குறித்த சமூக விரோத கும்பல்களை பொலிஸார் கைது செய்து வருகின்றனர். மேலும் குறித்த சமூக விரோத கும்பல்களுக்கு வெளிநாடுகளில் இருந்தும் பணம் அனுப்பப்படுவதாக பொலிஸாரின் விசாரணைகளில் கண்டறிந்துள்ளனர்.

இது தொடர்பில் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸார் தமது விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4)

# கொழும்பில் கைதான ஆவா உறுப்பினர்கள் மூவரில் ஒருவருக்கு விளக்கமறியல்; இருவர் இன்று ஆஜர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் கைதான ஆவா குழுவை சேர்ந்த மூவரில் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் விளக்கமறியல் விதித்துள்ளது.

டெங்கு காய்ச்சல் காரணமாக முதலில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையிலேயே விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

இன்றைய தினம் மற்றைய இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தபட உள்ளனர்.

குறித்த மூவரும் அரசடியில் உள்ள கடைக்குள் புகுந்து வாள் வெட்டு மற்றும் கடையை எரித்தமை, வாகனங்களை எரித்தமை, வீடுகளுக்கு சேதம் விளைவித்தமை, ஸ்ரான்லி வீதியில் மூவரை வெட்டியமை. சமாதானத்தை சீர்குலைக்கும் வகையில் வாள்களுடன் நகரபகுதியில் திரிநதமை என்ற பல குற்றம்களுடன் தொடர்புடையவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது .

இந்த நிலையில் குறித்த மூவர் மீதும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து அவர்களால் பயன்படுத்தப்பட்ட வாள் 3 கண்டு பிடிக்கபட்டுள்ளதோடு,

இதில் கைது செய்யப்பட்ட அரியாலை தனஞ்சியன் என்ப வரே இவர்களால் அரங்கேற்றப்பட்ட எல்லா குற்றம்களுக்கு தலைமை தாங்கி உள்ளமையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த சமூக விரோத கும்பல்களை வழி நடத்துபவர்களாக சன்னா, தேவா, பிரகாஷ், இருந்து வந்துள்ளனர்.

இந்த சமூகவிரோதிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை இவர்கள் சண்டிலிப்பாய் பகுதியில் கொலை ஒன்றையும் புரிந்துள்ளதாக பொலிஸாரால் தெரிவிக்கப் பட்டுள்ளது. (4)

## ஜெனிவாவில்...

தொடர்பிலான அறிக்கையை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளார்.

நாளைய தினமே இலங்கை தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளார். (11)

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

## இரு வருட அவகாச...

மக்கள் போராடும் இடத்திலும் கிழக்கு மாகாணத்தில் மனித உரிமை அமைப்புக்களின் அலுவலகங்களின் முன்றலிலும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இப் போராட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்கள், பொதுமக்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

## வடக்கு மாகாண...

வித்திருந்த நிலையில் நேற்றைய தினம் வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானத்தை வட மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்க பிரதிநிதிகள் நேற்றைய தினம் அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

அதன் போது வடக்கு மாகாண சபையின் கீழ் ஆயிரத்து 451 வெற்றிடங்கள் இருப்பதாகவும் அத் தரவுகளை கடந்த 18ஆம் திகதி ஆளுநர் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவைத்தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அவ் வெற்றிடங்களின் நியமனங்கள் தொடர்பிலும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பிலும் முக்கியமான கலந்துரையாடல் ஒன்று இன்றைய தினம் காலை 9.30 மணி அளவில் யாழ் மாவட்ட செயலக முன்றலில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் தொடர் போராட்டத்தின் மிக முக்கியமான தீர்மானம் எடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் அவசியம் கலந்து கொள்ளுமாறு வடமாகாண பட்டதாரிகள் சங்க ஒருங்கிணைப்பு குழு அறிவித்துள்ளது. (9)

## கோத்தா தலைமை...

ளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண ஊடாக, கோத்தபாய ராஜபக்ஷ சிறப்பு இரகசிய பிரிவு ஒன்றை இயக்கினார் என்றும், அது தனது அதிகாரத்துக்கு அப்பால் செயற்பட்டு என்றும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, சாட்சியம் அளித்துள்ளார் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஊடகவியலாளர்களை இலக்கு வைத்துச் செயற்பட்ட இந்தப் பிரிவு, இராணுவ கட்டளை அமைப்புக்கு வெளியே செயற்பட்டுள்ளது என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது.

அந்தக் காலகட்டத்தில் கொழும்பு பிரிவுக்கு மேஜர் ஜெனரல் அஜித் பெரேரா தலைமை தாங்கினார் என்றும் சரத் பொன்சேகா கூறியதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கு 5 தொலைபேசி சிம் அட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும், மரணச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று லசந்தவின் மரணம் துப்பாக்கிச் சூட்டினால் இடம்பெறவில்லை என்றும், தலையில் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டே அவர் கொல்லப்பட்டுள்ளதாக மீள் உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் தடயவியல் ஆய்வுகளில் இருந்து தெரியவந்திருப்பதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இதையடுத்து, விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுக்குமாறும், இதில் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (11)

## ‘நான் இயக்கவில்லை...’

கொலை வழக்கு நேற்றுமுன்தினம் கல்கிசை நீதிமன்றத்தில் நடைபெற்ற போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தனர்.

இந்தநிலையில், ஏஎவ்பி செய்தி நிறுவனத்துக்கு கருத்து வெளியிட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷ, இந்தக் குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்துள்ளார்.

இந்தக் கொலைகளுடன் எந்த தொடர்புகளும் இல்லை என நான் மறுக்கிறேன். இரகசிய தாக்குதல் குழு செயற்பட்டது பற்றித் தெரிந்திருந்தால், சரத் பொன்சேகா இராணுவத் தளபதி என்ற வகையில் அவர் என்ன நடவடிக்கை எடுத்தார் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை, ஊடகவியலாளர் கீத் நொயார கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்றிரவு மற்றொரு இராணுவப் புலனாய்வு அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

34 வயதுடைய இந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி மினுவாங்கொட பகுதியில் உள்ள வீட்டில் வைத்து, நேற்றுமுன்தினமிரவு கைது செய்யப்பட்டார்.

கீத் நொயார் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஏற்கெனவே 5 இராணுவப்புலனாய்வு அதிகாரிகள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

## கேப்பாப்பிலவு...

ட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் நியாயமான கோரிக்கைக்கு பதில் வழங்க வேண்டும் என்று அவர் மீள்குடியேற்றத்துறை அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் கோரினார்.

இது தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை உரியத் தரப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், இதன்படி எதிர்வரும் ஓரிரு தினங்களில் கிரமமான பதில் ஒன்று வழங்கப்படும் என்றும் அமைச்சர் சுவாமிநாதன் உறுதியளித்தார்.

இதேவேளை, ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த பிரேரணையை முன்னிட்டு, மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

இலங்கையின் உள்ளக பொறிமுறைக்குள் சர்வதேச நீதிபதிகளை இணைத்து கலப்பு நீதிமன்றத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் இந்த பிரேரணை ஊடாக இணங்கி இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால் இதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மறுத்து உரையாற்றினார்.

ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில், மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்த அறிக்கையில் மாத்திரமே சர்வதேச நீதிபதிகள் குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாறாக பிரேரணையில் அவ்வாறான எந்த விடயமும் இல்லை என்று பிரதமர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கும் சாத்தியம் இலங்கையில் நடைமுறையில் உள்ள யாப்பில் இல்லை என்பதால், அதனை தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளாது என்றும் உறுதியளித்தார்.

அதேநேரம், கடந்த காலங்களில் மகிந்த அரசாங்கம், ஐக்கிய நாடுகளின் முன்னாள் பொது செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட மர்சூசிக்கி தருஸ்மன் தலைமையிலான நிபுணர்கள் குழுவுடன் தொடர்புகளை பேணி வந்ததாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது குறிப்பிட்டார்.

நியூயோர்க் சென்ற மகிந்த ராஜபக்ஷவின் பிரதிநிதிகள், தருஸ்மனிடம் பலவிடயங்களை நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்ததுடன், அது தொடர்பான ஆவணப் பரிமாற்றங்களையும் மேற்கொண்டிருப்பதாக கூறினார்.

இவ்வாறு பரிமாற்றிக் கொள்ளப்பட்ட ஆவணங்களை தாம் சபையில் முன்வைக்க தயாராக இருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். (11)

## பொன்சேகாவை...

பாராளுமன்றத்தில் நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார். மேலும் அங்கு தொடர்ந்து அவர்,

வெள்ளைக் கொடி விவகாரத்தில் அமைச்சர் பொன்சேகா மீது நாம் வழக்கு தொடுக்கவில்லை. அவரை இழுத்துக் கொண்டு சென்று சிறையில் அடைக்கவில்லை.

ஆனால் அப்போது முறைகேடாக நடந்து கொண்டார்கள். அதற்காக இப்போது அவரிடம் மன்னிப்பு கேட்க தயாராக இருக்கின்றீர்களா? இதனை பகிரங்கமாக கூறுங்கள் பார்க்கலாம்.

அதேபோல அம்பாந்தோட்டையை விற்க போவதும் இல்லை அதனை விற்க வேண்டிய அவசியமும் இல்லை.

அதனை அபிவிருத்தி செய்து நாட்டையும் அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதோடு வருமானத்தை ஈட்டும் நடவடிக்கையினையே நாம் செய்து வருகின்றோம் எனவும் பிரதமர் தெரிவித்தார். (11)

## மீனவர்களை...

துறை அமைச்சரிடம் மீனவர்கள் வலியுறுத்தினர்.

அப்போது மீனவர்களிடம் சுஷ்மா ஸ்வராஜ், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை மீட்போம், அவர்களால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிப்போம். அதுவரையிலும் இலங்கையிடம் தொடர்ந்து இந்தியா வலியுறுத்திக் கொண்டே இருக்கும்.

ஏற்கெனவே வாக்குறுதி அளித்ததுபோல் ஆழ்கடல் மீன்பிடி வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.1500 கோடி நிதி விரைவில் ஒதுக்கப்படும் என உறுதியளித்தார்.

இந்த சந்திப்பின்போது மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், பாஜக எம்.பி. இல.கணேசன் ஆகியோர் உடனிருந்தனர். (11)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்களை பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
(சி-7868)
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress

2003ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க **Green Card** விசா விண்ணப்பிப்பதில் அனுபவமிக்க எமது நிறுவனத்தில் **USA, Canada, Australia,** மற்றும் **UK** உட்பட ஏனைய ஐரோப்பிய நாடுகளின் விசா விண்ணப்பப் படிவங்களை எமது நிறுவனத்தின் நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்று மிகச் சரியாக பூர்த்தி செய்து கொள்வதுடன் விசா சம்பந்தமான கடிதங்களையும் ஏற்பாடு செய்து கொள்வதற்கும் மற்றும் விசா நியமனங்கள் **(Appointment)**, பயண காப்பீடு போன்றவற்றையும் பெற்றுக் கொள்ள எமது நிறுவனத்தை அணுகவும்.
எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ, பிரதிநிதிகளோ இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.
நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
(075)
Bristolvisa CONSULTATIONS
No. 8/3/4, Bristol Street, Colombo 01.
077 427 6579, 011 2 393 919
info@bristolvisa.com / www.bristolvisa.com

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 2217603, 021 567 1532

B.Com திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்கை நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
மேற்படி கற்கை நெறிக்கு, பல்கலைக்கழகத்தினால் உள்வாங்கப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பம்:-01.04.2017 காலை 8.00 மணி
குறிப்பு:-B.A க்குரிய விரிவுரைகள் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
விபரங்கட்கு:- S.அருள்நங்கை T.P:-021 222 8148
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-7871)

Architectural CAD Centre[Jaffna-Vavuniya-Colombo]
[Personal-Group-Visiting Classes]
2D-Drawing 3D-Modeling
Auto CAD
Lecturer By Mr.K.N Muguanthan(DA)
University of Peradeniya.
University of Moratuwa.
Open University of Sri Lanka.
University of Colombo.
Link: 077-5116320, 071-8617972
[Civil & Mechanical]
(சி-7874)

JCB பைக்கோ வாடகைக்கு
JCB பைக்கோ வேலைகளுக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 860 0093

தேவை
ஊர்ச்சேவல் உயிருடன் 1kg 650/= பேடு 1kg 450/= அத்தோடு வான்கோழி, விறாத்துக் குஞ்சு என்பன கொள்வனவு செய்யப்படும்.
தாசன் பாம்
158/2, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
0773127498
(8373)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்
UK-5Kg மேற்பட்ட பொதி 800/-
UK-11Kg மேற்பட்ட பொதி 500/-
(8355)
திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd
T.P:-0777554528
யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, பருத்தித்துறை, சங்கானை, கிளிநொச்சி

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-7835)

தேவை
எமது நிறுவனத்துக்கு சிற்றுண்டி மற்றும் மசாலா, பறாட்டா, தோசை தயாரிப்பாளர் தேவை.
(அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும்)
லிங்கம் கிறீம் ஹவுஸ்
213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(8362)

கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு
இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்
நீங்கள் 8ம் வகுப்பு கல்வியினை பூர்த்தி செய்தவரா? O/L அல்லது A/L Pass பண்ணியவரா? பல்கலைக்கல்வி பூர்த்தி செய்த பட்டதாரியா? வேலை பார்த்துக்கொண்டிருப்பவரா? கனடாவில் சட்டரீதியாக குடிபெயர அனைவருக்கும் வாய்ப்புண்டு.
கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் Immigration அலுவலரால் பூரணவிளக்கம் அளிக்கப்பட்டு உங்கள் சந்தேகங்களுக்கு பதிலும் அளிக்கப்படும்.
கருத்தரங்கு நாள்-26-03-2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி
IMMIGRATION APPROVED Canada
V2 Travels
முற்பதிவு அவசியம் -0768226236 49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்
(சி-7864)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.